
# ஊமைத்துரை

அல்லது

## தன்னலம் கருதாத தியாகி



வித்யோதயா பப்ளிகேஷன்ஸ், மதராஸ்-2.

எஸ். எஸ். எல். ஸி. (1955) பதிப்பு

# ஊமைத்துரை

அல்லது

# தன்னலம் கருதாத தியாகி


ஆசிரியர்

வித்வான் ந. சண்முகம்,

தொண்டைமண்டலம் உயர்நிலைப்பள்ளி, சென்னை.



வித்யோதயா பப்ளிகேஷன்ஸ்

9, மவுண்ட் ரோடு : : மதராஸ் - 2.



பதிப்புரிமை]



1954

[விலை அணா 12

மூன்றும் (எஸ். எஸ் எல். ஸி. 1955) பதிப்பு—ஏப்ரல் 1954

*Approved by the Madras Text-book committee for Non-detailed Study-class use-vide Fort St. George Gazettee (Part I-B) Supplement Page 4 dated 20-5-53*

*Prescibed for Tamil Nondetailed study for the Madras S. S. L. C. Public Examination, March 1955 in Proceedings R. C. No. 606-B/53, of the Commissioner for Government Examinations, Madras dated 1—4—1954.*

ஞானோதயா பிரஸ் 11, ஆண்டர்சன் தெரு, மதராஸ்-1.

# முன்னுரை

பாரத நாட்டவர், தாம் இழந்த உரிமையை மீண்டும் பெறுதற்கு, முதன் முதலாக முயன்றது 'சிப்பாய்க் கலக'த்தின்பொழுது, என்பர் பலர்; அதனையே 'முதல் உரிமைப் போர்' என்றும் கூறுவர். ஆயினும் அதற்கும் ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே, தமிழ் மக்களிடையே உரிமை வேட்கை மிகுந்து நின்றது என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை. ஒரு சிற்றூரை ஆண்டு வந்த சிற்றரசனொருவன், அன்னியராட்சியை வெறுத்து, தன்னலமின்றி இறுதி வரை எதிர்த்துப் போர் புரிந்தான் என்ற உண்மையைச் சரித்திரம் கூறுகின்றது. தமிழ்நாட்டில் வேரூன்றிய வெள்ளையருக்கு, எதிர்ப்பு இருந்தது என்பதே தமிழரின் உரிமைவேட்கையை உறுதிப்படுத்து கிறது. உரிமைப் போரை நடாத்தியவருள் ஒருவரான **ஊமைத்துரை** என்ற பாஞ்சாலங்குறிச்சி மன்னனுடைய வாழ்க்கை வரலாற்றினை இந்நூல் எடுத்துக் கூறுகின்றது.

இச்சிறுநூல், கவிராஜ பண்டிதர் ஜெகவீர பாண்டியனார் இயற்றியுள்ள **பாஞ்சாலங்குறிச்சி வீரசரித்திரம்**, திரு. தி. நா. சுப்பரமணியனார் இயற்றிய **கட்டபொம்மு** என்னும் நூல்களையும், சில **நாட்டுப் பாடல்களையும்** ஆதாரங்களாகக் கொண்டு எழுதப் பெற்றுள்ளது. இவ்வாசிரியர்கட்கு எனது நன்றி.

இதனைத் தமிழர் ஆதரிப்பர் என்பது எனது துணிபு.

சென்னை,
1—11—1952.

**ஆசிரியர்**

# பொருளடக்கம்


| எண் | | | பக்கம் |
| --- | --- | --- | --- |
| 1. | தோற்றமும் இளமையும் | ... | 1 |
| 2. | நாட்டுப் பற்று பெற்ற பரிசு ! | ... | 9 |
| 3. | சிறையில் தவம் | ... | 15 |
| 4. | அரசுரிமை ஏற்றல் | ... | 23 |
| 5. | மீண்டும் பகை | ... | 28 |
| 6. | தூத்துக்குடியில் பாஞ்சைவீரர் | ... | 34 |
| 7. | கருணைக் கடல் | ... | 39 |
| 8. | படுகளம் | ... | 45 |
| 9. | பாஞ்சையர் வீரம் | ... | 57 |
| 10. | ‘ சாமியைப் காப்பாற்று ’ | ... | 66 |
| 11. | மருது சகோதரர் | ... | 76 |
| 12. | இறுதிப் போர் | ... | 83 |
| 13. | தியாகியின் மறைவு | ... | 87 |
| 14. | வீர வழிபாடு | ... | 93 |
| | மாதிரி வினக்கள் | ... | 95 |



போர்முனையில் பாஞ்சையதிபர்

—Courtesy: Editor, "Ananda Vikatan"

# ஊமைத்துரை

அல்லது

# தன்னலம் கருதாத தியாகி

—— :(o): ——

## 1. தோற்றமும் இளமையும்

### பெறற்கரிய பெரும்பேறு

மக்கள் வாழ்வின் முக்கிய நோக்கம் புகழேயாகும். பெறற்கரிய பெரும்பேருகிய அப்புகழை—என்றும் அழியாத இணையிலாப் புகழைப் பெறவே அனைவரும் விரும்புகின்றனர். இதனாலன்றே வள்ளுவப் பெருந்தகையாரும்,

> " தோன்றிற் புகழொடு தோன்றுக ; அஃதிலார்
> தோன்றலிற் றேன்ருமை நன்று "

என நவின்றுள்ளார் ! வீரம், ஈகை, இரக்கம் என்பன தெய்வ மணம் கமழும் சிறந்த பண்புகளாகும். இவற்றுள் தலையாயது **வீரம்** என்பதாம். எந்நிலையிலும் கலங்காது நிமிர்ந்து நிற்கும் தன்மையே வீரமாகும். வீரத்தால் எய்தும் புகழ் கல்வி, கொடை, தூய்மை, பேரறிவு முதலியவற்ருல் அடையும் புகழினும் மேம்பட்டதாகும். நாற்றிசையிலும் பரந்து நிற்கும் வீரப் புகழே மன்னர்க்கும் ஏற்றதாகும்.

## உத்தம வீரர் பண்பு

எல்லா நாடுகளிலும், எக்காலத்திலும், யாவராலும் வீரர்கள் புகழ்ந்து போற்றப்படுகின்றனர். மலருக்கு மணமும், மணிக்கு ஒளியும் போல, மன்னருக்கு வீரம் சிறப்பு ஆகும். போரில் தமது வீரத்தைக் காட்டி வீர மரணம் அடைந்த வீரர்களையும், செய்தற்கரிய செயல்களைச் செய்த பெரியோர்களையும் வழிபடுவது நம் நாட்டின் தொன்றுதொட்டு வரும் வழக்கமாகும். இங்ஙனம் மக்களால் வழிபடத்தக்க சிறப்பு வாய்ந்த வீரர்கள் எப்பொழுதும் அறநெறி வழுவாமல்—நீதி தவறுமல் நேர்மையைக் கடைப்பிடித்து ஒழுகுவார்கள். அதனுல்தான் வீரத்திலும் தீரத்திலும் விளக்கமுற்றிருந்த நாடு நம் பாரத நாடு என்று அமரகவி பாரதியார் அழகாகப் பாடியுள்ளார். வீரம் நிறைந்து, ஈரமும் மிகுந்து விளங்கிய தமிழ் நாட்டின் தலைசிறந்த வீரர்களைப்பற்றிப் பழந்தமிழ் நூல்களில் விரிவாகக் காணலாம்.

## பாரதவீரர் மரபு

இத்தகைய வீரர்களால்தான் ஒரு நாடு நலம்பெறக் கூடும். பண்டை நாளிலிருந்தே நம் பாரதநாட்டுக்கு **வீரபூமி** எனப் பெயர் வழங்கி வருகிறது. **இராமன், விசயன், அபிமன்னன், கன்னன்** முதலானோர் புராண காலத்தில் வாழ்ந்த பாரத நாட்டுப் பெருவீரர்கள். சரித்திரத்தில் இடம் பெற்றுள்ள வீரரில் முதன்மையானவர் அலெக்ஸாந்தரை எதிர்த்த **புருடோத்தமர், சிவாஜி, இராணி இலக்குமிபாய்** முதலியோர் ஆவர். தமிழகத்தில் அண்மையில் இத்தகைய வீர நிலையில் தலை சிறந்து

நின்றவர் **வீரபாண்டியக் கட்டபொம்மு** என்ற பாஞ் சாலங்குறிச்சி மன்னர். பண்டைத் தமிழ் மக்கள் வீரம் மிக்கவர் என்பதற்குச் சான்ருக அவரது வாழ்க்கைச் சரிதம் அமைந்துள்ளது. கட்டபொம்மனின் வீரத்தைக் கூரியவாளுக்கு ஒப்பிட்டால், அவரது உடன்பிறந்தோ ருகிய **ஊமைத்துரை**யின் வீரம் உலையிலிட்டுப் பழுக்கக் காய்ச்சிப் பதம் செய்த வாளுக்கு ஒப்பிடலாம். இவ்விரு வீரரும் அடிமை வாழ்வை வெறுத்து, தமிழகத்தைத் தமது வயப்படுத்த முயன்ற வெள்ளைக்குழுவினரை எதிர்த்து நின்று, அமரவாழ்வெய்தினர். அவ்விருவருள் **ஊமைத்துரை**யைப் பற்றியதாகும் இந்நூல்.

**கம்பளத்தார் வரலாறு**

**பொம்மு** என்ற மரபினன் ஒருவன், துங்கபத்திரை நதிக்கரையிலுள்ள **கம்பிலி** என்ற நகரினை விடுத்துப் பாண்டிய நாட்டை அடைந்து, பாண்டிய மரபினைச் சேர்ந்த **சகவீரபாண்டியன்** என்ற குறுநில மன்னனது ஆதரவில் வாழ்ந்து வந்தான். அவன் வீரம் மிக்கவன். ஒரு முறை அவன் கள்வர் பலரைத் தான் ஒருவனுகவே எதிர்த்து நின்று வெற்றியடைந்தான். அதனை அறிந்த வீரபாண்டியன் அவனைத் தன் அவைக்கு அழைத்துப் பல சிறப்புக்களை வழங்கினன்; **கெட்டிபொம்மு** என் னும் சிறப்புப் பெயரையும் நல்கினன். நாளடைவில் 'கெட்டி' என்ற தமிழ்ச்சொல் தெலுங்கில் 'கட்டி' என மருவினமையால், அவன் **கட்டிபொம்மு** வென வழங்கப்பட்டு, இறுதியாகக் **கட்டபொம்மு** எனப் பெயர் பெற்ருன். மற்றுமொருமுறை தன் பகைவரைக் கட்ட பொம்மு வென்று வாகை சூடினமையால், பாண்டியன்

அவனுக்குத் தன் பெயரையே பட்டப்பெயராக நல்கினன். அன்று முதல் அவனுக்கு **வீரபாண்டியன் கட்டபொம்மு** என்ற சிறப்புப் பெயர் வழங்கலாயிற்று. சகவீர பாண்டியனுக்கு மைந்தரில்லாமையால், அவன் கட்டபொம்முவுக்கே தனது அரசுரிமையை அளித்தான். அரசுரிமை பெற்ற கட்டபொம்மு, தன் மரபினர் பலரை வடக்கேயிருந்து வரவழைத்து, அந்நாட்டில் குடியேற்றினன். கம்பிலி நாட்டிலிருந்து வந்தமையால், 'கம்பிலி' என்பது 'கம்பளம்' என மருவி, அம்மரபினர் **கம்பளத்தார்** எனப் பெயர் பெற்றனர்.

## பாஞ்சாலங்குறிச்சியைத் தோற்றுவித்தல்

சகவீர பாண்டியனது தலை நகரம் **வீரபாண்டியபுரம்.** கட்டபொம்முவும் அதனையே தலைநகராகக் கொண்டு ஆண்டு வரும் நாளில், ஒரு நாள் **சாலிகுளம்** என்னுமிடத்தை அடுத்திருந்த கானகம் ஒன்றில் வேட்டையாடச் சென்றான். அவ்வமயம் மன்னனது வேட்டை நாய்கள் ஒரு முயலைத் துரத்திச் சென்றன. ஓரிடத்தை அடைந்ததும் அம்முயல் வீராவேசத்துடன் திரும்பி, வேட்டை நாய்களை எதிர்த்து நின்றது! அதனைக் கண்டு பெருவியப்பெய்திய கட்டபொம்மு, அவ்விடத்தில் தலைநகரை நிர்மாணித்தான்; தன் பாட்டனாகிய **பாஞ்சாலன்** என்பானது பெயரால், அதற்குப் **பாஞ்சாலங்குறிச்சி** எனப் பெயரிட்டான்; அதனைப் **பாஞ்சை** என்றும் சொல்வர்.

## ஊமைத்துரையின் தோற்றம்

கட்டபொம்மனரின் வழி முறையில், நாற்பத்தெட்டு மன்னர் எழுநூறு யாண்டுகள் ஆட்சி புரிந்தனர்.

அவர்களுள் **சகரவீரக் கட்டபொம்மு** என்பவர் நாற்பதாவது மன்னர்; அவர் **திக்குவிசயர்** என வழங்கப் பெற்ருர். அவரது மனைவியாராகிய **ஆறுமுகத்தம்மைக்குக்** கி. பி. 1760-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் மூன்ரும் நாள் ஓர் அருமை மைந்தர் பிறந்தார். அவரே பிற்காலத்தில் தமிழ் நாட்டின் பெருமையை நிலைநாட்டிய மாபெரும் தமிழ் வீரர் **வீரபாண்டியக் கட்டபொம்மனுர்** ஆவர். ஆறு யாண்டுகள் சென்றபின் அவரது இளவலாகத் **தளவாய்க் குமாரசுவாமி** என்பவர் தோன்றினுர். அவ்விருவருக்கும் இளையவராகத் **துரைச்சிங்கம்** பிறந்தார். தளவாய்க் குமாரசுவாமி **ஊமைத்துரை** அல்லது **சிவத்தையா** என அழைக்கப் பெற்ருர். இம் மூவருக்குப் பின் **ஈசுரவடிவு, துரைக்கண்ணு** என்னும் இரு பெண்மக்கள் பிறந்தனர். புதல்வர் மூவரும் பல கலைகளைப் பயின்று, உடற் பயிற்சியிலும், படைக்கலப் பயிற்சிலும் வன்மை பெற்று விளங்கினர்.

**ஊமைத்துரையின் குணநலன்கள்**

தளவாய்க் குமாரசுவாமி கொன்னிப் பேசும் இயல்புடையவராதலால் அவரை **ஊமைத்துரை** என்று அனைவரும் அழைத்தனர். அவர் ஒருவருடனும் அதிகமாகப் பேசமாட்டார்; பெரும்பாலும் மௌனமாகவே இருப்பார். அவர் அச்சம் என்பதையே அறியாதவர். அவரது நற்குண நற்செயல்களும், நடையுடைபாவனைகளும், பழக்கவழக்கங்களும் வியப்புக்குரியனவாயிருந்தன.

ஊமைத்துரை மெலிந்த உடலினர்; ஆயினும் வயிரம் போன்ற உள்ள உறுதி வாய்ந்தவர். அவர் சிவந்த மேனியர்; முகத்தில் பெருமிதம் காணுவிடினும்

தெளிவும் பொலிவும் அமைதியும் ஒளி வீசி நின்றன. வெள்ளையரைக் கண்டால் அவர் வேம்பெனச் சீறுவார். தம் இடது உள்ளங் கையில் சில நெற்பதர்களை வைத்து, வாயினால் ஊதிப் பறக்கவிடுவார். இச் செயலின் உட்கருத்து, வெள்ளையரைப் பதர்களைப்போல் ஊதி விடவேண்டும் என்பதாம். வெள்ளையர் அவரை 'ஊமைச் சகோதரன்' (Dumb brother) என்று அழைத்து வந்தனர். அவர் கல்விப் பயிற்சியில் உயர் நிலையை அடையவில்லை ; தமிழும் தெலுங்கும் சிறிதளவு பயின்றார். ஆயினும் விற்போரிலும், வாட்போரிலும், வேல் எறிதலிலும், கவண்கல் எய்தலிலும், குதிரையேற்றத்திலும் மிக வல்லவராக விருந்தார். அவரது பட்டத்து வெண்பரிக்குப் **பாலராமு** என்பது பெயர் ; அவரைத் தவிர வேறு எவரும் அதன்மீது ஏறமுடியாது ; அவரைக் காணுந்தோறும் அந்தப் பரி உவகையுடன் காதுகளை நெரித்துக்கொண்டு நிற்கும். அவரது சிலம்பப் போர்முறை போற்றற்குரியது.

## குடிமக்கள் போற்றிய கோமகன்

ஊமைத்துரை சிறந்த போர்வீரர். போர் முறையில் நீதிவழுவாமல், பகைவரின் போக்கை அறிந்து மதிநுட்பத்துடன் செயலாற்றுவார். அவர் அறநெறியில் தருமனுக்கும், ஆண்மையில் வீமனுக்கும் ஒப்பானவர் ; வீரத்தில் பார்த்தனுக்கும், நுண்ணறிவில் நகுலனுக்கும் இணையானவர் ; கொடையில் கன்னன். இத்தகைய அரும் பெருங் குணங்களுடன் நேர்மை, இரக்கம், பெருந்தன்மை ஆகிய நற்பண்புகள் நிரம்பப் பெற்றிருந்தமையால், குடிமக்கள் அவரைப் பெரிதும் போற்றி வந்தனர். குடிமக்கள் அவரைச் **சாமி** என்றே அழைத்து வந்தனர்.

தலைமை வகித்துப் போர் புரிவதில் அவர் ஆற்றல் மிக்க வர். தளராத ஊக்கம், எதனையும் நுட்பமாக ஆராயும் திறமை, அஞ்சாமை என்னும் இம்மூன்றும் அவருக்கு இயற்கைப் பண்புகளாக அமைந்திருந்தன. அவரது நாட்டிற்கு **ஊமையன் சீமை** என்று பெயர் வழங்கி வந்ததை நோக்கின், அவரது மாட்சியும் திறனும் ஒரு வாறு நமக்குப் புலனுகும். அவரது ஆற்றலை மாற்ற லரும் போற்றியுள்ளனர் எனின், அதுபற்றி யாம் பின் னும் புகழுரை கூறுதல் எதற்கு? **வெல்ஷ்** என்ற தானைத் தலைவர், "நான் அறிந்துள்ள மனிதருள் இவர் மிகவும் வியப்புக்குரியவர்" என்று அவரைப் புகழ்ந்து கூறியுள் ளார். கற்ருரைக் கற்ருர் காமுறுதல் போல் வீரர் திறனை வீரர்தாம் அறியக்கூடும். வில்விசயன் புதல்வன் **அபி மன்னன்** என்றே அவரைக் கூறுதல் தகும். இந்த உவமை அவருக்குப் பெரிதும் பொருந்தும். இருவரும் இளம் வயதினர்; விசயன் புதல்வர்; அருந்திறலாளர்; வாட் போரில் வல்லவர். பொது மக்கள் அவரைப் புகழ்ந்து வந்துள்ளனர். நாட்டுப்பாடலில் அவரைப் புகழ்ந்து போற்றும் வரிகளிற் சிலவற்றைக் கவனிப்பின் அவ்வுண்மை நன்ருக விளங்கும்.

"ஊமைத்துரை என்னும் பேரைச் சொன்னல் அங்கே
சீமைத் துரைகள் எல்லாம் நடுங்கிச்
சேமத்தை நாடியே தென்திசை நோக்காமல்
சித்தம் கலங்குவார் மெத்தவுமே;


தென்னுட்டுச் சிங்கம்என் றென்னுட்டும் பேர்நாட்டித்
திக்கு விசயங்கள் செய்துவந்தான்;
இந்நாட்டுள் வெள்ளையர் ஏறிவராமலே
ஏறுபோல் சீறி எதிர்த்து நின்ருன்!"

## ஊமைத்துரையின் வாழ்க்கைத்துணேவியார்

அவரது வாழ்க்கைத்துணேவியார் **சவுந்திரவடிவு** என்பவர். அவ்வம்மையாரிடம் அழகும் குணமும் ஒருங்கே நிறைந்திருந்தன. அவ்விருவரும் இல்லறத்தில் அமர்ந்து, நல்லறங்கள் பல புரிந்து, இனிது வாழ்ந்து வந்தனர்.

## வீரபாண்டியர் அரசுரிமை ஏற்றல்

இளேயோனுகிய துரைச்சிங்கமும் அழகும், ஆண்மையும் மிக்கவர். இம்மூவரும் கண்டோர் வியக்கும் வண்ணம் ஒற்றுமையாக இனிது வாழ்ந்து வந்தனர். வீரபாண்டியர், தமது முப்பதாவது வயதில் அரசுரிமை ஏற்ருர். தம்பியரிருவரும் இளவரசுப்பட்டம் சூடினர். மதிநுட்பம் மிகுந்த **சிவசுப்பிரமணியப் பிள்ளே** என்பார் அமைச்சராக அமர்ந்தார். இவ்வாறு, பல நலன்களும் ஒருங்கே அமையப்பெற்று, உயர்ந்த புகழுடன், இவ்வரசிளங்குமரர் வாழ்ந்து வருங்கால், அவர்கட்குப் பல இன்னல்கள் நேர்ந்தன.



## 2. நாட்டுப்பற்று பெற்ற பரிசு!

### தென்னாட்டின் அக்கால நிலைமை

முடிவுடை மூவேந்தரான சேர, சோழ, பாண்டியரின் ஆட்சி வீழ்ச்சியுற்ற பின், தென்னாட்டில், விசய நகரத்தாரின் ஆட்சி தொடங்கிற்று. அவர்களுடைய பிரதிநிதியாகத் தென்னாட்டை ஆண்டு வந்த விசுவநாத நாயக்கரது காலத்தில், அவரது தளவாயும் முதல் அமைச்சருமாக இருந்த **அரியநாத முதலியார்,** பாண்டிய நாட்டை எழுபத்திரண்டு பாளையப்பட்டுக்களாகப் பிரித்தார். பாண்டிய மன்னர் வழி முறையில் வந்தவர்களும், விசுவநாத நாயக்கருடைய இனத்தவரும், கம்பளத்தாரும் பாளையப்பட்டுக்களின் தலைவராயினர். விசயநகரத்தாரின் ஆட்சி வீழ்ந்தபின் அந்தந்தப் பகுதிகளை ஆண்டு வந்தவரே அவற்றிற்கு உரிமை பெற்றனர். முஸ்லிம்களின் ஆட்சியில், பாளையக்காரர் அவர்களுக் கடங்காது, உரிமையுடன் வாழ்ந்து வந்தனர்.

### கிழக்கிந்தியக் குழுவினர்

அக்காலத்தில் மேனாட்டிலிருந்து நமது நாட்டவருடன் வாணிபம் புரிய வந்த **கிழக்கிந்தியக் குழுவினர்** (East India Company), தேவையான பொழுது கர்நாடக நவாபுக்குக் கடன் வழங்கி வந்தனர். பெற்ற கடன் தொகையைத் திருப்பிக் கொடுக்க அவரால் இயலாமற் போனதால், அதற்கு ஈடாக நாட்டில் வரிப்

பணம் வசூல் செய்யும் உரிமையைக் கும்பினியார்* அவரிடமிருந்து பெற்றனர். அதனால் பாளையங்கள் அனைத்தும் கும்பினியாரின் ஆட்சிக்குட்பட்டன.

## கும்பினியாரின் நயவஞ்சகம்

இத்தகைய சூழ்நிலையில், நெல்லை மண்டலத்திலிருந்த முப்பது பாளையப்பட்டுக்களில் ஒன்றான-பலநலன்களும் சிறந்து விளங்கிய-பாஞ்சாலங்குறிச்சியின் அரசுரிமையை 1790-ம் யாண்டு பிப்ரவரித் திங்கள் இரண்டாம் நாள் **வீரபாண்டியக்கட்டபொம்மனார்** ஏற்றார். நாட்டில் கும்பினியார் பெற்ற உரிமையைப் பாளையக்காரருள் சிலர் வெறுத்து, அவர்கட்கு வரிசெலுத்த மறுத்தனர்; அவர்களுள் பலர் கும்பினியாரின் படை பலத்துக்கு அஞ்சி, அவர்களது ஆட்சிக்கு அடிபணிந்து, வரி செலுத்தி வந்தனர். கும்பினியார் பாளையப்பட்டுக்களின் எல்லைகளை வரையறுக்க முற்பட்ட பொழுது, பாஞ்சாலக்குறிச்சியைச் சேர்ந்த இரண்டு ஊர்களை எட்டையபுரத்துடன் இணைத்து விட்டனர். இதனால் பாஞ்சாலக்குறிச்சியாருக்கும் எட்டையபுரத்தாருக்கும் பகை மூண்டது. எட்டையபுரத்தாருக்குக் கும்பினியாருடைய ஆதரவு ஏற்பட்டது.

## பாஞ்சையதிபரின் உறுதி

தமிழகத்தில் ஒற்றுமை குன்றி, அன்னியராட்சி தலையெடுக்கத் தொடங்கியதைப் பாஞ்சை மன்னர்

---

*Company என்ற ஆங்கிலச்சொல் தமிழில் 'கும்பினி' என மருவி வழங்கப்பட்டு வந்தது.

கண்டு மனம் பதறினர். 'வணிகருக்கு வரி கொடேன்' என்று மனவுறுதி கொண்டார். பாளையக்காரரில் சிலர் அவருக்குத் துணையாக நின்றனர். கும்பினியாரின் ஆட்சிக்குட்பட்ட சில கிராமங்களில் பாஞ்சாலங்குறிச்சியார் சென்று வரி வசூல் செய்யத் தொடங்கினர். இதன் பயனுகக் கும்பினியாருக்குக் கட்ட பொம்மனின் மேல் பகைமை அதிகரித்தது. அவர்கள் பாளையக்காரர் சிலரைப் பாஞ்சாலங்குறிச்சியாரின் மேல் புகார்கள் எழுப்புமாறு தூண்டிவிட்டு, அவற்றை ஏற்றுப் பாஞ்சயரை வம்புக்கிழுக்கத் தொடங்கினர்கள்.

## பாஞ்சையதிபர் கலெக்டரைக் காணச் செல்லல்

கும்பினியார் **ஆலன்** என்பானைப் பாஞ்சை மன்னரிடம் தூது விடுத்து, நிலுவையாக விருந்த வரிப்பணத்தை வசூல் செய்துகொண்டு வருமாறு அனுப்பினர்கள். கட்டபொம்மு 'வரிகொடேன்' என்று திட்டமாகக் கூறிவிட்டார். "வானம் பொழியுது பூமி விளையுது, மன்னவன் காணிக்கு ஏது கிஸ்தி?" என்றார். "நாடோடிகளான வெள்ளையருக்கு நாடாளும் மன்னன் வரி கொடுப்பதா?" என்று சீறினர். ஆலன், சென்ற காரியம் கைகூடாமல், திரும்பினன். கலெக்டர் **ஜாக்ஸன்,** தன்னை வந்து உடனே காணவேண்டுமென்று பாஞ்சையதிபருக்கு ஓர் ஆணை விடுத்தான்; அதற்கு மறுமொழி கிடைக்கவில்லை. தூதுவனுகச் சென்ற **வைகுண்டம் பிள்ளையும்** வெறுங்கையுடன் திரும்பினன். மீண்டும், கும்பினியாரின் கட்டளைப்படித் தன்னைப் பதினைந்து தினங்களுக்குள், அதாவது 5-9-1798-க்குள், இராமநாதபுரத்தில் காணவேண்டும் என்று முடங்கல் விடுத்தான்.

கலெக்டரைத் தாம் காணச் செல்வதை அவர் விரும்பா விடினும், தம்பியரையும் அமைச்சரையும் கலந்து ஆலோசித்து, சென்று காண்பதென முடிவு செய்தார். அவருடன் தம்பியரும், அமைச்சரும், உறவினரும், மெய்க்காவலரும் சென்றனர்.

## கலெக்டர் பாஞ்சை மன்னரை அவமதித்தல்

அதற்குள், கலெக்டர் இராமநாதபுரத்தை விடுத்துக் குற்றாலம் சென்றான். பாஞ்சசையதிபர் அதனை அறிந்து, குற்றாலத்தை யடைந்தார். அங்கு கலெக்டர், மன்னரை வரவேற்காமல், சொக்கம்பட்டி, சேற்றூர், வில்லிபுத்தூர், பேரையூர், கமுதி முதலிய இடங்களுக்கெல்லாம் தனது முகாமை மாற்றிக்கொண்டு, இறுதியாக இராமநாதபுரம் சேர்ந்தான். கட்டபொம்மனும் கலெக்டரைப் பின்தொடர்ந்து சென்றார். இராமநாதபுரத்தில், 10-9-1798-ல், காலை பத்து மணிக்குக் கலெக்டரைக் காணச் சென்றார் நந்தமிழ் வீரர். அன்னாரை மன்னருக்குரிய மரியாதையுடன் வரவேற்காமல், அவர் மீது பல குற்றங்களைச் சாட்டி, சிறை செய்யக் கருதினன் கலெக்டர். அவனது உட்கருத்தை அறிந்து, தம்பிமார் புடைசூழ வெளியேறி, தடுத்த வெள்ளையரைத் தவிடு பொடியாக்கி, தமது பரிவாரத்துடன் பாஞ்சையை அடைந்தார் மன்னவர். அமைச்சர் சிவசுப்பிரமணியப்பிள்ளை மட்டும் கும்பினியாரிடம் அகப்பட்டுக் கொண்டார்.

## பாஞ்சைக் கோட்டை பிடிபடல்

இராமநாதபுரத்தில் நடந்த செயல்களைக் கும்பினியார் நுட்பமாக ஆராய்ந்து, அமைச்சரை விடுதலை

செய்து, ஜாக்ஸனையும் வேலையினின்று நீக்கிவிட்டனர். இதன் பின்னரும் மேலும் பகைமை நீடித்து வந்தது. கட்டபொம்மனுரை அடக்கினலன்றி, வெள்ளையர் இந் நாட்டில் வேரூன்ற இயலாது எனக்கருதி, **மேஜர் பானர்மன்** என்பவன் தலைமையில் ஒரு பெரும்படையைப் பாஞ்சாலங்குறிச்சியின்மேல் செலுத்த முடிவு செய்தனர் கும்பினியார். இருதிறத்தவருக்கும் கடும் போர் நிகழ்ந்தது. முடிவில் 6-9-1799-ம் நாளன்று இரவு, பாஞ்சைப்பதியின் தலைவர், தம்பியரும் அமைச்சரும் உடன்வர, நள்ளிரவில் கோட்டையை விட்டு, பகைவர் அறியா வண்ணம் வெறியேறினுர். அதன் பயனுகக் ‘காகம் பறவாத’ கட்டபொம்மனுரின் கோட்டை வெள்ளையரால் கைப்பற்றப்பட்டுத் தரை மட்டமாக்கப்பட்டது. அமைச்சரும் மற்றும் பலரும் சிறைப்பட்டனர். அவ்வமைச்சருக்குத் தூக்குத் தண்டனை விதித்து, அதை உடனே நிறைவேற்றினுன் பானர்மன்.

## காட்டிக்கொடுத்த படலம்

கோட்டையைவிட்டு வெளியேறிய கட்டபொம்மு, பலவிடங்களில் மறைந்திருந்து, இறுதியாகப் புதுக்கோட்டை அரசனுடைய மாளிகையில் விருந்தினராகத் தங்கியிருக்கையில், அவனுடைய துரோகச் செயலால் வெள்ளையரிடம் சிறைப்பட்டார். அவருடன் அவரது தம்பியரும் உறவினர் பலரும் கைது செய்யப்பட்டனர். அக்டோபர் மாதம் ஐந்தாம் தேதி அவர்கள் **கயத்தாறு** என்னுமிடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவ்விடத்தில் பாளையக்காரரை ஒன்று கூட்டி, வீரமன்னவ

ரின் பேரின் பல குற்றங்களைச் சுமத்தி ஒரு போலி விசாரணை நடத்தி, அவருக்குத் தூக்குத் தண்டனை விதித்தான் பானர்மன்! அக்டோபர் பதினாறும் தேதி இப்படுகொலை நடந்தது. அப்பொழுது அவருக்கு வயது முப்பது.

## விதியின் விளையாட்டு

தூக்குத் தண்டனை! யாருக்கு? அந்நியருக்கு அடங்கிக் கப்பம் செலுத்த மறுத்த வீரத் தமிழ் மன்னருக்கு! மானவுணர்ச்சியற்ற மற்ற மன்னருக்கு இடையில் வீர ஒளி வீசி நின்ற தமிழ் வீரருக்கு! இதை உன்னுந் தோறும் நமது நெஞ்சம் பதை பதைக்கிறது! அங்கங்கள் பதறுகின்றன! ஊருக்கு வெளியில், மங்கம்மாள் சாலையிலிருந்த கட்டைப் புளியமரமே தூக்கு மேடையாகத் திகழ்ந்தது! நாட்டுப் பற்றுக்குப் பரிசு தூக்கு மேடை! விதிதான் இருந்தவாறு என்னே! வாழ்க கட்டபொம்மனர் புகழ்!



# 3. சிறையில் தவம்

## சிறைசெய்த கொடுமை

கட்டபொம்மனர் திருமேனி கயத்தாற்றுப் புளிய மரத்தில் ஊசலாடியபின், பதினறு திங்கள் கடந்து சென்றன. ஊமைத்துரையும் அவரது தம்பியும், மற்றும் உறவினருமாகப் பதினறு பேர் பாளையங்கோட்டையில் சிறைவைக்கப்பட்டனர். பாளையக்காரரிடமிருந்த ஆயுதங்கள் அனைத்தும் கும்பினியாரால் பறிமுதல் செய்யப்பட்டன. கோட்டைகள் எல்லாம் தரைமட்டமாக்கப்பட்டன. பாளையக்காரருடைய வல்லமையை அழித்து, வீரபாண்டியரையும் தூக்கிலிட்டுக் கொன்றதனல், மக்கள் அனைவரும் வெள்ளையர் ஆட்சிக்கு அடங்கி வாழ்ந்து வந்தனர். அதனல் அவர்களுக்கு எதிராக யாதொரு கலகமும் நடைபெறவில்லை; நாட்டில் அமைதி நிலவுவதாகக் கும்பினி அதிகாரிகள் நினைத்தனர்; கலகத்தை அடக்க வந்த படையிற் பெரும்பகுதி திருசிரபுரம் சென்றுவிட்டது; மற்றப் பகுதி சங்கர நயினர் கோயில், கயித்தாறு, பாளையங்கோட்டை என்னும் மூன்று இடங்களில் பிரிந்து இருந்தது.

## ஊமைத்துரையின் துடிப்பு

சிறையிலிருந்த மன்னர் குலத்தவர் மனம் மிக நொந்தனர். சிறைவாசக் கொடுமையை அவர்களால் தாங்கமுடியவில்லை; அதற்கு முடிவும் ஏற்படவில்லை. ஒவ்வொரு நாளும் 'இன்று விடுதலை பெறுவோம்'

என்று எண்ணி யெண்ணி, சிந்தை நொந்து, நாட்களை எண்ணி வந்தனர். பெருங்குற்றவாளிகளைப் போல் தம்மையும் தமது உறவினரையும் கடுஞ்சிறையில் வைத்திருந்ததைக் கண்டு ஊமைத்துரை உள்ளங் கொதித்து உடல் துடித்து நின்றார்; பழியும் அவமானமும் அவரைக் கொல்லாமல் கொன்றன. சிறையிலிருந்து மீள வழி தோன்றாமல் அவர் நிலைகுலைந்திருக்க, நாட்டில் கும்பினியாரின் ஆட்சி நிலைத்து நின்றது.

### கும்பினியார் கருத்து

இரண்டு காரணங்களால் ஊமைத்துரையை வெளியே விடுவதற்குக் கும்பினியார் இணங்கவில்லை. அவர் சூழ்ச்சி மிக்கவர்; அருந்திறலாளர்; நாட்டு மக்கள் அவரிடம் கொண்டிருந்த அன்பு அளவிடற்கரியது; செயற்கரிய செயல்களை எளிதில் செய்து முடிக்கும் இயல்பினர்; கடைக்கண் பார்வையால் மக்களைத் திரட்டிக் கடல்போல் கொதித்து எழச்செய்ய வல்லவர். அவரை வெளியே விட்டால் படை திரட்டிப் பழிவாங்குவார் என்று கும்பினியார் கருதினர். இரண்டாவது, வெள்ளையரை எதிர்த்தவர் கடுந்துயர் அடைவர் என நாடு முழுதும் அறிந்து நடுங்கவேண்டும் என்பது. இக்காரணங்களால், அவரை வெளியேவிடின் தம் ஆட்சிக்குக் கேடு நேரும் எனக் கும்பினியார் கருதினர்.

### மக்களின் முடிவு

இவர்களது நிலை இவ்வாறிருக்க, பாஞ்சை மக்கள் தம் அரும்பெரும் தலைவரையிழந்து, மனம் கலங்கி

நின்றனர்; விதிப்பயனை எண்ணி நொந்து வேதனைப் பட்டனர். சீரும் சிறப்பும், செல்வமும் செறிந்திருந்த அந்நாட்டின் குடிமக்கள், சீரழிந்து செயல் மறந்து நின்றனர். கும்பினியாரின் கொடுமைகளும் நாள்தோறும் வளர்ந்து வந்தன. ஆயினும் மன்னவரை மக்கள் மறக்க வில்லை. சீமைத்துரையை மதியாத ஊமைத்துரையின் ஒப்பற்ற செயல் திறமையை எண்ணியெண்ணி, எவ்வாருயினும் அவரை மீண்டும் மன்னவராக்க வேண்டும் என்று முடிவு செய்தனர்.

## புரட்சிவீரர் கூட்டம்

இம் முடிவின் பயனாக, மக்கள் அனைவரும் சூழ்ச்சிகள் பல செய்யத் தொடங்கினர். கிளர்ச்சி மறைமுகமாகவே நடைபெற்றது. "ஊமைத்துரை முதலியோரைச் சிறையினின்றும் மீட்கவேண்டும்; பாஞ்சாலங்குறிச்சியை மீண்டும் தலைநகராக்கிக் கோட்டை கொத்தளங்களை முன்போல் எழுப்பி, வலிவான அரண் அமைத்து, முன்போல் அரசினை ஆளவேண்டும்; போர் மூண்டால், பகைவரை வேருடன் களையவேண்டும் அல்லது நாம் அடியோடு மடியவேண்டும்" என்று மக்கள் உறுதி பூண்டனர். இக்கருத்தினைக் கொண்டவர்களின் கூட்டம் ஒன்று **கொம்பாடி** என்னும் ஊரில் கூடியது. அங்குச் செய்த முடிவுகள், **சில்லாங்குளம்** என்னும் ஊரில் மீண்டும் ஆராயப்பட்டு, ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. 16-1-1801-ம் நாளன்று பாஞ்சாலங்குறிச்சி மரபினருள் முதன்மையானவர் அனைவரும் ஒட்ட**நத்தம்** என்னுமூரில் திரண்டு, கருதிய செயலைச் செய்து முடிக்கப் பல வழி வகைகளை ஆய்ந்து, ஒருமுகமான

முடிவுக்கு வந்தனர். காலம், இடம், செயல் என்ற மூன்றையும் கருதி, வினையாற்ற முனைந்து நின்றனர். ஆத்திரப்படுவது அவலமாகும் என்றெண்ணி, அமைதியுடன் உரிய காலத்தை எதிர்நோக்கியிருந்தனர்.

## ஊமைத்துரையின் வீர உரை

இஃதிங்ஙனமிருக்க, காவலிலிருந்த கோமகன், கடுங்காவல் நீண்டு சென்றதால் நெஞ்சம் கொதித்து, சிறையை உடைத்து மீளவேண்டும் என்று முடிவு செய்தார். தம்முடனிருந்தோரை ஒரு நாள் அருகிலழைத்துத் தமது கருத்தை விளக்கினர். "நாம் பாராண்ட பெருமை கனவாகியது; ஓராண்டாக இழிநிலையிலுள்ளோம். இனி இந்நிலையிலிருப்பதைக் காட்டிலும் இறப்பதே மேல். கும்பினியார் குரோத மனப்பான்மையில் இன்னல் பல விளைவிக்கின்றனர். அவர்கள் நம்மை விடுதலை செய்யமாட்டார்கள். வீர நிலையிலிருந்த நாம் இன்று ஈன நிலையிலிருப்பதைக் காட்டிலும் இறப்பதே மேல். உடைத்து வெளியேறுவதே முறை. அரிய அண்ணலை இழந்தோம்; வாழ்வில் தாழ்வுற்றோம். புகழ்பெற்ற மரபினில் தோன்றிய நாம் இகழ் வருமாறு நடத்தல் கூடாது. ஆதலின், நம் வீரத்தை நாட்ட முயலவேண்டும்" என்று உணர்ச்சியுடன் அவர் கூறிய உரைகளைக் கேட்ட உறவினர் அனைவரும் அவரது கருத்துக்கிசைந்தனர்.

## புரட்சிவீரர் பாளையங்கோட்டை அடைதல்

தலைவரை மீட்கவேண்டும் என்று மும்முறை கூடி முடிவு செய்த மக்கள் அனைவரும் குறிப்பிட்ட நாளில்

திரண்டு எழுந்தனர். நாட்டில் வெளிப்படையாக ஒருவரும் அறியாவண்ணம் இந்தப் புரட்சிப்படை உருவாயிற்று. நாட்டின் பல ஊர்களிலிருந்தும் வீரர் பலர் புறப்பட்டு, மறைவாகவே இரவோடிரவாக வழி நடந்து, வல்ல நாட்டு மலையை அடைந்தனர். ஊமைத்துரையின் ஒன்றுவிட்ட தம்பியாகிய **சிவத்தையா** என்பவர் புரட்சிவீரரின் தளபதியாக அமர்ந்தார். புரட்சிவீரர் முந்நூற்று முப்பத்தாறு பேர் இருந்தனர். உணவருந்தியபின், பலவகைப் போர்க்கருவிகளைத் தாங்கிக் கொண்டு, நள்ளிரவில் பிரயாணம் செய்து, பொழுது புலருமுன் அனைவரும் பாளையங்கோட்டையை அடைந்தனர். அங்கே, ஒரேயிடத்தில் திரண்டிராமல், வெவ்வேருகப் பிரிந்து சென்று, மறைந்து இருந்தனர்.

## புரட்சிப்படை சிறைச்சாலையை நண்ணுதல்

மறுநாள் பொழுது புலர்ந்தது. அன்று 1801-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முதல் நாளாகும். புரட்சிவீரர், காலை உணவருந்திப் பல பிரிவினராகப் பிரிந்து, நகரம் முழுதும் விரவி நின்றனர்; ஆனால் போர்வீரராகத் திரியவில்லை; மாறுவேடங்கள் பூண்டு உலாவினர். சிலர் சடைமுடிகளுடன் துறவிகள்போல் வேடம் பூண்டு, மேனி முழுதும் வெண்ணீறு பூசி, சீடர் குழாம் பின் தொடர, மடங்களிலும், ஆலயங்களிலும் மரங்களின் நிழலிலும் இருந்தனர். சிலர் பண்டாரங்கள் போலவும் தாதர்கள் போலவும் வேடங்களணிந்து, தெருக்களில் சென்று பிச்சை கோரி நின்றனர். சிலர் ஆயுதங்களை உள்ளே மறைத்து வைத்து, சுற்றிலும் சில விறகுகளைச் செருகிக் கட்டுக் கட்டாக எடுத்துக்கொண்டு

வீதிகள் தோறும் விலை கூறி நின்றனர்; சிலர் புற்கட்டு களுக்குள்ளே ஆயுதங்களை மறைத்துவைத்துப் புல் விற்பதாகக் கூறினர். கட்டுகளின் விலையை அதிகமாக ஏற்றிக் கூறியதால், அவற்றை நகரமாந்தர் வாங்கவில்லை. பகல் முழுதும் இவ்வாறு நகரின் பல பகுதிகளில் பிரிந்து நின்ற புரட்சிவீரர், மாலையில் ஊமைத்துரை இருந்த சிறைச்சாலையின் அருகில் கூடினர்; ஆறு மணிக்குச் சிறைச்சாலையைச் சூழ்ந்து நின்றனர்.

## சிறைச்சாலையின் நிலைமை

நாட்டில் வெளிப்படையாக அமைதி நிறைந்திருந்தமையால், வெள்ளையர் விழிப்புடன் இராமல் சற்றே அயர்ந்திருந்தனர். பாளையங்கோட்டையில் அவ்வமயம் கும்பினியார் இருபதின்மரே இருந்தனர். புரட்சிவீரர் சிறைக்கூடத்தைச் சூழ்ந்து நின்ற நேரத்தில், வெள்ளையர் அனைவரும் **மெக்காலே** என்னும் தளபதியின் விடுதியில் நடந்த விருந்தொன்றுக்குச் சென்றிருந்தனர். சிறைக்கூடத்தில் காவற்படையினர் வெகு சிலரே இருந்தனர். இந்த வாய்ப்பினால் புரட்சிவீரர் எண்ணிய கருமம் விரைவில் கைகூடிற்று.

## புரட்சிப்படை சிறைக்குள் செல்லுதல்

புரட்சிவீரர் கோட்டையைச் சுற்றிலும் ஆங்காங்கே நின்றிருந்தனர். அவர்களில் ஒருவன் கோட்டையின் வடக்கு வாயிலைக் காத்து நின்ற இரு போர்வீரரிடம் சென்று, சிறைக்குள்ளே ஒருவரைக் காண அனுமதி கேட்டான். காவலரிருவரும் "உள்ளே செல்லக்

கூடாது" என்று சொல்லித் தடுத்து நின்றனர். அச் சொற்கள் வாயிலிருந்து வெளிவருமுன், அயலேயிருந்த புரட்சிப் படையினரில் சிலர் அக்காவலர் மீது பாய்ந்து, அவர்களிடமிருந்த ஆயுதங்களைப் பறித்துக்கொண்டு, அவர்களையும் கீழே தள்ளினுர்கள். அப்பொழுதே சில புரட்சிவீரர் சிறைக்குள் புகுந்தனர். சிவத்தையாவும் மற்றவரும், பகைவர் இடையில் வந்து தடை செய்யாத வாறு காத்து நின்றனர்.

### ஊமைத்துரையின் மீட்சி

உள்ளே புகுந்த பாஞ்சை வீரர் ஊமைத்துரையை யும் அவர் தோழரையும் கண்டு, அவர்கள் விலங்குகளை உடைத்தெறிந்து, அங்கிருந்த ஆயுதங்களைக் கவர்ந்து கொண்டு, பெருமிதத்துடன் "இன்னும் பகைவர் உளரா?" என்று ஆர்ப்பரித்து நின்றனர்; தடுத்த காவற் படையினரை ஒடுக்கிவிட்டு, அனைவரும் வெளியே வந் தனர். புரவலரைக் கண்ட புரட்சிவீரர், அகமகிழ்ந்து, ஆரவாரத்துடன் வீரமுழக்கம் செய்தனர்; வேறு எவரும் தம்மை அணுகாதவாறு கொக்கரித்து, நகர்வலம் வந்து, மன்னவரை நடுவிலிருத்திப் பாஞ்சைப் பதியை நோக்கி விரைந்து சென்றனர்.

### புரட்சிப்படை பாஞ்சையை அடைதல்

புரட்சிப் படைவீரரால் தோல்வியுற்ற சிறைக் காவற்படையினர், விருந்தில் முனைந்திருந்த தளபதியி னிடம் சென்று, நடந்ததை நவின்றனர். தளபதி உடனே புரட்சிவீரரை மடக்குமாறு ஒரு குதிரைப் பட்

டாளத்தை ஏவினன். பாளையங்கோட்டைக்கும் பாஞ்சைப்பதிக்கும் இடையில் உள்ள தூரம் முப்பது மைல். புரட்சிவீரர் பன்னிரண்டாம் மைலில் செல்லுகையில், கும்பினிப்படைகள் அவர்களை அணுகின. பாஞ்சை வீரர் வெகுண்டு, பகைவரை வளைத்து நின்று, மேற் செல்லவொட்டாமல் தடுத்து, வெற்றி கொண்டனர்; கும்பினி வீரர் பாஞ்சைப் படையை எதிர்த்து நிற்கும் ஆற்றல் இல்லாமல் தோற்றுப் பின் வாங்கினர். இவ்வாறு, சேதம் யாதொன்றுமின்றி, பொழுது புலர இரண்டு நாழிகை இருக்கும்பொழுது பாஞ்சைவீரர் பாஞ்சைப் பதியை அடைந்தனர்.

## ஊமைத்துரை கண்ட காட்சியும் கொண்ட உறுதியும்

ஊமைத்துரை வெற்றி வீரராகத் தமது நகருக்குள் புகுந்தார். அவரைக் கண்டதும் கும்பினியாரின் அதிகாரிகள் அனைவரும் ஓடி மறைந்தனர். கதிரவன் உதித்ததும் தம் வீரருடன் அரசர் பதியைச் சுற்றிப் பார்த்தார். அந் நகரம் முன்னமிருந்த பொலிவு இழந்து, செல்வங்கள் மறைந்து, கீழ்நிலையிலிருந்ததைக் கண்டார். கோட்டை மதில்கள் தரைமட்டமாக்கப்பட்டிருந்தன. பிறந்த பொன்னாட்டின் நிலையைக் கண்டு பெரிதும் நெஞ்சம் வருந்திப் பின் ஒருவாறு மனம் தெளிந்து வஞ்சம் தீர்க்க முடிவு செய்து, அதற்குரிய செயல்களில் விரைவில் முனைந்தார்.

## 4. அரசுரிமை ஏற்றல்

### மரபினரைத் திரட்டுதல்

தகர்த்தற்கரிய கோட்டையை வெள்ளையர் தரை மட்டமாக்கியது பாஞ்சை மன்னருக்குப் பேரெரிச்சலை விளைவித்தது. "இத்தகைய கொடுஞ்செயலைச் செய்துள்ள பகைவரை வேரறுத்து வாகை சூடி வெற்றிக் கொடி நாட்டி, என் பெயரையும் புகழையும் நிலை நாட்டுவேன்" என்று வஞ்சினம் சாற்றித் தமது மரபினர் அனைவரும் விரைவில் பாஞ்சை நகரில் வந்து கூட வேண்டும் என்று ஓலை அனுப்பினர். 'சாமி'யின் ஆணையைக் கண்ட குடிமக்கள், உள்ளம் களித்து, உவகை மிகுந்து, ஊக்கத்துடன் புறப்பட்டுத் திரள் திரளாகப் பாஞ்சையை அடைந்தனர். அங்கே ஊமைத்துரையைக் கண்டு, அகம் மிக மகிழ்ந்து, அடிபணிந்து வணங்கி, அவரது ஆணையை எதிர்நோக்கி நின்றனர். தமது மரபினரின் பெருங்கூட்டத்தைக் கண்ட தலைவர், அவர்களுக்கு முகமன் கூறி, மேலும் தொடர்ந்து ஆற்றவேண்டிய செயல்களை விளக்கினர். "நாம் பகைவனது சிறையினின்று மீண்டு வந்துள்ளோம். வெள்ளையர் படைகள் விரைவில் வந்து சேரும். பகைவர் வெடி மருந்துகள், பீரங்கிகள், துப்பாக்கிகள் முதலான அரிய சாதனங்களுடன் வருவார்கள். அவர்கள் இங்கு வருவதற்குள் நமது அரண்களை நாம் அமைத்துக் கொள்ளவேண்டும். முதலில் நமது கோட்டையை நாம் மீண்டும் எழுப்ப வேண்டும். இன்றேல் நாம்

தோல்வியடைவதன்றி, மீண்டும் சிறைபுகவும் நேரிடும்'' என்றும் தம் இனத்தவர்க்கு எடுத்துக் கூறினர்.

## கோட்டையை மீண்டும் அமைத்தல்

அவரது உரையைக் கேட்ட மக்கள் ஒருமனதுடன் கோட்டை அமைப்பதில் நாட்டம் கொண்டனர். நாட்டிலுள்ள ஆண் பெண் அனைவரும் அவ்வேலையில் ஈடுபட்டனர். 'கோட்டைச் சுவர்கள் கும்பினியாரின் குண்டுகளுக்கு இலக்காகும்; ஆதலால், பீரங்கித் தாக்குதல்களைத் தாங்கி நிற்கும் மதில்களை அமைக்க வேண்டும்' என்று ஊமைத்துரை முடிவு செய்தார். அக்கருத்திற் கேற்பக் கோட்டை மதிற்சுவர்களை அமைக்கலானார்கள். நன்கு குழைத்த மண்ணில் கம்மஞ்சக்கையை இழைத்து, பதனீரையும் கருப்பஞ்சாற்றையும் கலந்து, மதில்கள் அமைக்கப்பட்டன. ஏழாயிரத்துக்கும் அதிகமான மக்கள் இவ்வேலையில் அல்லும் பகலும் ஈடுபட்டிருந்தனர். இதிலிருந்தே குடிமக்கள் கோமகனிடம் கொண்டிருந்த அன்பையும் நன்மதிப்பையும் அறியலாம். ஆறு நாட்களில் கோட்டை கொத்தளங்கள் முன்போல் எழுந்து நின்றன! பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை முன்பு இருந்ததைக் காட்டிலும் பொலிவுடனும் பெருமிதத்துடனும் காணப்பட்டது. அலாவுதீன் ஓரிரவில் அமைத்த மாயக் கோட்டையோ என்று கண்டோர் வியக்கும் வண்ணம் சிறப்புற்றிருந்தது!

## கோட்டையின் அமைப்பு

கோட்டையின் மதிற்சுவர் ஆறடி அகலமும், பதினெட்டடி உயரமும், ஆயிரத்து முன்னூற்றைம்பது

கஜம் நீளமும் உடையதாய் அமைந்திருந்தது. எவ்வழியிலிருந்தும் பகைவர் உட்புகாதவாறு உறுதியாக அமைக்கப்பட்டிருந்தது. ஆங்காங்கே கொத்தளங்கள் அமைந்திருந்தன. வெளியே யிருந்து திரண்டு வரக்கூடிய பகைவரை மறைந்து நின்று எளிதில் தாக்கி வெற்றி கொள்வதற்குத் தக்க வழிவசதிகளும், போர்க் கருவிகளைச் சேமித்துவைக்க மறைவிடங்களும் அமைக்கப்பட்டிருந்தன. மதிற்சுவர் இரட்டையாக அமைக்கப் பெற்று, இடைவெளியில் உமி, பதர், வரகு, வைக்கோல் முதலான பொருள்கள் நிரப்பப் பெற்றிருந்தன. அக்கோட்டையைக் கண்ட நாட்டு மக்களின் உள்ளத்தில் கிளர்ச்சித் தணல் கொழுந்துவிட்டெரிந்தது.

## மீண்டும் நிமிர்ந்து நின்ற நகரம்

கோட்டை உருவாகிக் கொண்டிருந்த பொழுதே, போர்வீரருக்குப் படைக்கலப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. நாட்டு மக்களின் உள்ளன்பைக் கண்ட ஊமைத்துரை உளமிகக் களித்தார். குடிமக்களுடைய அன்பும், போர்வீரருடைய ஆற்றலும் பகைவரை வேருடன் களைய உதவும் என்று உறுதியாகக் கருதினர். இவ்வற்புதச் செயலில் ஈடுபட்டிருந்த அனைவருக்கும் பெரிய விருந்தொன்று அளித்தார்; தாமே பந்தியில் வந்து முகமன் கூறி, அவர்களுடன் அளவளாவி, நன்றி கூறினர்; இறைவனருளால் வெள்ளையரை வென்று வெற்றி காண்போம் என்று உறுதி கூறினர். மீண்டும் எழிலுடன் விளங்கிய நகரத்தைக் கண்ட மக்கள் தலைமகனை மனமாரப் போற்றினர்.

## குடிமக்களின் வேண்டுகோள்

இந்நிலையில், குடிமக்கள் தலைவரை அணுகி, அரசுரிமை ஏற்குமாறு பணிவுடன் வேண்டினார்கள். காவலர் அதற்கு இசையவில்லை. "அரசுரிமை ஏற்றுச் சுகமாக வாழ்வதற்கு யாம் இங்கு வரவில்லை. பகைவரைப் பழிவாங்கி, எமக்கும் எம் அண்ணலுக்கும் நேர்ந்த அவமானத்தை ஒழிக்கவே வந்தோம். அண்ணலை இழந்தபின் அரசினை அடைந்து வாழ நான் விரும்பவில்லை," என்று உறுதியாகக் கூறினார். சகோதர வாஞ்சைக்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

## தம்பியின் வற்புறுத்தல்

ஆனால், தம்பி துரைச்சிங்கம் இம்முடிவை ஏற்கவில்லை. "அண்ணா! ஊழ்வினையால் நாம் கொடிய சோதனைகட்கு ஆளானோம். இறைவனருளால் மீண்டும் பதியை அடைந்து, நாட்டு மக்களின் நல்லுழைப்பால் கோட்டையை மீண்டும் நிருமாணித்தோம். இந்நிலையில் தலைவனின்றி நாம் தவிப்பதா? அரசுரிமை ஏற்று அதிகாரம் பெற்றாலன்றி, நாம் எண்ணும் கருமங்கள் ஈடேறுமா? அரசுரிமையுடன் தோற்றமளிக்கும் தலைவரைக் காண மக்கள் விழைந்து நிற்கின்றனர். அதனால் ஊக்கம் பெருகும்; ஆற்றல் அதிகரிக்கும். எமது வேண்டுகோளை நீவிர் புறக்கணிக்கலாகாது" என்று பலவாறு கூறி நின்ற தம்பியின் சொற்களைத் தட்டமுடியாமல், முடிசூட இணங்கினார்.

## முடிசூட்டு விழா

அரசகுலத்தினரின் முறைப்படி ஊமைத்துரை பாஞ்சாலங்குறிச்சியின் மன்னராக முடிசூட்டப்பட்டார்.

இலட்சுமி விலாஸம்' என்னும் மண்டபத்தில் முறைப்படி முடிதரித்தார்; சங்கங்கள் முழங்கின: மங்கலப்பாடல்கள் இசைக்கப்பட்டன; மேளதாளங்கள் நிறைந்து ஒலித்தன. முடிதரித்த பின் நகரமாந்தர் புடைசூழ நகர்வலம் வந்து, கொலுவில் அமர்ந்து, அறங்கள் பலபுரிந்து, அவையினரை நோக்கி, "நான் இன்று சூடிக்கொண்டது அரசப்பட்டம் அல்ல: பகை வரை வேருடன் களைய ஏற்ற வீரப்பட்டம் ஆகும்" என்று முழக்கம் செய்தார்.



# 5. மீண்டும் பகை

## கும்பினியார் படை திரட்டுதல்

'தான் அனுப்பிய படை வீரரை முறியடித்துவிட்டு, ஊமைத்துரையும் புரட்சிவீரரும் தப்பிவிட்டனரே' என்று வெள்ளையர் தளபதி மனம் புழுங்கினான். சிறைக் கூடம் சென்று, தலைமைக் காவலனைக் கண்டு, நடந்ததைப்பற்றி வினவினான். சிறைத் தலைவன் அன்று நடைபெற்ற செயல்களைத் தெளிவாக விளக்கினான். "ஊமைத்துரை உள்பட முப்பத்தறுவர் கடுஞ்சிறையில் அமைதியாகவே இருந்தனர். திடீரென்று, அன்றொரு நாள் மாலை சிலர் ஆயுதங்களுடன் சிறையினுள் புகுந்து, இங்குள்ள படைக்கலங்களைக் கவர்ந்து கொண்டு ஊமைத்துரை முதலானவர்களை விடுதலை செய்து தம்முடன் அழைத்துக்கொண்டு, விரைந்து சென்றனர்" என்று காவற்றலைவன் கூறினான். அதுகேட்ட தளபதி, மிகவும் சீற்றங்கொண்டு, இராணுவத் தலைவர்களுக்கு ஆணைகள் அனுப்பி, விரைவில் போர்வீரரைக் கயத்தாற்றுக்குக் கொண்டு வருமாறு பணித்தான்.

## கும்பினிப்படை கயத்தாறு அடைதல்

சீவலப்பேரி, சங்கரநயினார்கோயில் என்னும் இடங்களிலிருந்த போர்ப் படைகளை, மேஜர் **ஷெப்பர்டு** என்ற படைத்தலைவன் கயத்தாற்றுக்கு அழைத்து வந்தான். பாளையங்கோட்டையிலிருந்து மேஜர் **மெக்**

**காலே** தன் படை வீரருடன் கயத்தாற்றையடைந்தான். கயத்தாறு திருநெல்வேலிக்கு வடமேற்கே இருபது மைல் தொலைவிலுள்ளது. படைகளில் பீரங்கிப்படை, குதிரைப்படை, காலாட்படை என்னும் மூவகை இனங்களும் இருந்தன.

## குலையநல்லூரில் பாடி அமைத்தல்

1780-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் ஏழாம் நாளிரவு வெள்ளையர் படை பாஞ்சைப் பதியை நோக்கிவிரைந்து சென்றது; இந்தப் பயணம் மறைவாகவே நடைபெற்றது. காலைக் கதிரவன் தோன்றுமுன், படை **குலைய நல்லூர்** என்னும் சிற்றூரை அடைந்தது. அவ்வூர் கயத்தாற்றுக்குக் கிழக்கில் பதினெட்டு மைல் தூரத்திலுள்ளது. அங்கிருந்து பாஞ்சாலங்குறிச்சி வடகிழக்கில் நான்கு மைல் தொலைவிலுள்ளது. குலையநல்லூர்க் குளத்தின் கரையில் கும்பினிப் படையினர் கூடாரங்கள் அமைத்துக்கொண்டு இளைப்பாற அமர்ந்தனர். பிப்ரவரி மாதம் எட்டாம் நாள் காலை படைவீரர் தமது பாடி வீடுகளில் உண்டு களித்து உறங்கியிருந்தனர்.

**பாஞ்சை வீரர் கும்பினிப்படையை வளைத்துக் கொள்ளுதல் :**—பகைவர், தம் கோட்டைக்கு அருகில் பாசறை அமைத்துக்கொண்டனர் என்பதையறிந்த பாஞ்சை மக்கள் பெருமகிழ்ச்சியடைந்தனர். கும்பினிப் படைகளை இடைவழியிலேயே வேருடன் களைந்து விட வேண்டும் என்று கருதி, ஊமைத்துரை தமது படைகளை ஆயத்தம் செய்தார். கம்பு, கோடாரி, வேல், வாள், ஈட்டி, வல்லயம், வளைதடி முதலான போர்க்கருவிகளுடன் ஆயிரம் போர்வீரர் ஓட்டமும் நடையுமாக

வெள்ளையர் பாசறையை நோக்கி விரைந்து சென்றனர். பாசறைக் கருகில் சென்றவுடன், கூடாரங்களை நாற்புறமும் வளைத்துக்கொண்டனர். திகைத்து நின்ற பகைவர், விரைவாகத் திரண்டு போரிட முனைந்தனர்.

## பாஞ்சை வீரர் தம் கோட்டையை அடைதல்

பாஞ்சை வீரர் வேல்கொண்டு தாக்கவே, கும்பினிப் படைவீரர் வெடிகளைத் தொடுத்து விடுத்தனர்; பாசறையில் மறைந்து நின்று கும்பலாகச் சூழ்ந்திருந்த பாஞ்சை வீரரை இடைவிடாது சுட்டனர். குண்டு மாரியைப் பொருட்படுத்தாது, குதிரைப்படைகளை ஊடுருவிச் சென்று, காலாட் படைகளினிடையே புகுந்து, கம்புகளாலும் வேல்களாலும் பலரைக் குத்திக் கொன்று, பாஞ்சைப் படைவீரர் மூர்க்கமாகப் போராடினர். அதனால் கும்பினி வீரரில் பலர் உடல் சிதைந்து, தோள் முறிந்து, தலையிழந்து மடிந்தனர். ஆயினும், வெள்ளையரின் குண்டுகளுக்குப் பல பாஞ்சை வீரர் இலக்காகி மடிந்தனர். அதனால், நெடுநேரம் எதிர்த்துப் போரிட முடியாமல் பாஞ்சையர் கோட்டையை நோக்கிக் கடுக நடந்தனர். தமது பாசறையைத் திடீரெனத் தாக்கிச் சிறிது நேரத்தில் கடுஞ்சேதம் விளைவித்த பாஞ்சை வீரரின் ஆற்றலைக்கண்டு, வெள்ளையர் தளபதி பதைபதைத்தான்; மீண்டும் அபாயம் ஏற்படாதவாறு, பாசறைக்குக் காவல் ஏற்படுத்திக் கவனத்துடன் இரவு முழுதும் கண்மூடாமல் காத்து நின்றான்.

## கும்பினிப் படைத்தலைவன் கண்ட காட்சி

'பொழுது புலர்ந்தது: புள்ளினம் ஆர்த்தன: எழு பசும் பொற்சுடர் எங்கணும் பரவி ஓங்கி வளர்ந்

தது'. கும்பினிப் படைவீரர் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு, அணியணியாகப் பாஞ்சையை நோக்கி நடந்தனர். வெள்ளையர் தளபதி, சாலிகுளம் பறம்பைக் கடந்து சரிவில் இறங்கியதும் பாஞ்சைக் கோட்டையைக் கண்டான்: கண்டவுடன் திகைத்து நின்றான்! கண்களைக் கசக்கிக் கொண்டு தான் காண்பது கனவோ நனவோ என்று மருண்டான்! அவன் கண்ட காட்சி அவனைத் திடுக்கிடச் செய்தது!

## தளபதியின் திகைப்பு

தரைமட்டமாக்கப்பட்ட பாஞ்சைக் கோட்டை மீண்டும் வீறுடன் விளங்கியது. அரண்களில்லாத நகரை எளிதில் கவர்ந்து கொள்ளலாம் என்று மனப்பால் குடித்திருந்த தளபதி, வலிய அரண்களைக் கண்டதும் மதி மயங்கி நின்றான்! ஊமைத்துரையைச் சிறைப்பிடிக்க வந்த சீமைத்துரை உள்ளம் உடைந்து உணர்வின்றி நின்றான்! தரையோடு தரையாகத் தகர்க்கப்பட்டிருந்த கோட்டை மீண்டும் கம்பீரமாக விளங்குவதைக் கண்டான்! இவ்வற்புதச் செயலை வியந்து, 'அரண்களும் கோட்டையும் எவரும் நம்பமுடியாத வேகத்தில் அமைக்கப்பட்டிருந்தன' என்றொரு படைத்தலைவன் புகழ்ந்து கூறியுள்ளான். கோட்டையைச் சுற்றிலும் வலிவான அரண்கள் அமைக்கப்பட்டிருந்தன.

## தளபதி செய்த முடிவு

வெள்ளையர் தளபதி தனது துணைவருடன் கலந்து ஆலோசனை செய்தான்; தன் வலியையும் மாற்றான் வலியையும் ஆராய்ந்தான். முடிவில், படையெடுப்பினால் தங்களுக்கே தோல்வி உண்டாகும் என்று எண்ணி,

கோட்டைக்கு ஒரு மைல் தொலைவில், ஓட்டப்பிடாரம் என்னுமூருக்கு அருகில், பாசறைகளை அமைத்துச் சேனைகளை அங்கு தங்குமாறு ஏவினன். தொலைப் பார்வைக் கருவியின் உதவியால், பாறையின் அருகி லிருந்த ஒரு மேட்டின்மேல் ஏறி நின்றுகொண்டு, கோட்டையைக் கூர்ந்து கவனித்தான். கோட்டைக் கருகிலும் கொத்தளங்களிலும் ஏறக்குறைய இரண்டா யிரம் போர்வீரர் ஆயுதபாணிகளாகப் போர்க்கோலம் பூண்டு, உறுதியுடனும் ஊக்கத்துடனும் நிற்பதைக் கண்டு வியந்து நின்றான். கோட்டைக்குள் சென்று பகைவரின் படைநிலைகளை ஆய்ந்து வருமாறு சில ஒற்றரை ஏவினன். அவர்களும் வணிகர்போல் மாறு வேடம் பூண்டு, கோட்டைக்குள் புகுந்து, அங்கிருந்த நிலைகளை ஆராய்ந்து, மீண்டு வந்து தாம் கண்டதைச் சேனைத்தலைவனிடம் நவின்றனர். "கொத்தளங்களிலும் வெளியிலும் காணப்படும் படைவீரர்போல் இருமடங்கு போர்வீரர் உட்புறம் குழுமியுள்ளனர். அனைவரும் ஆயுதபாணிகளாகப் போரை எதிர்நோக்கி ஆவலுடன் நிற்கின்றனர். எங்கும் போர்க்கருவிகள் குவியல் குவிய லாகக் குவிந்து கிடக்கின்றன" என்ற ஒற்றர் உரை யைக் கேட்ட மேஜர் மெக்காலே மனந்தளர்ந்தான். "இந்நிலையில் கோட்டையைத் தாக்குவது இயலாத காரியம். ஆதலின் திரும்பிச் செல்வதே நல்லது" என்று முடிவு செய்தான்.

### கும்பினிப் படையினர் பின்வாங்குதல்

கும்பினிப்படை ஒரு செவ்வகவுருவில் அணி வகுத்து நின்றது; முன்னும் பின்னும் பீரங்கிப்படை யினர் காவல் காத்து நின்றனர். இவ்வாறு, காலை பத்து

மணிக்கு வந்த படை, மாலை வந்த வழியே நடந்து சென்றது! ஆனால், கோட்டைமேல் படையெடுப்பது போல் பாவனை காட்டி, பகைவரை ஏமாற்றி, சேதமின்றிச் செல்லவேண்டும் என்று முடிவு செய்தான் தளபதி. வெள்ளையர் படையை எதிர்நோக்கி ஆயத்தமாகப் பாஞ்சைவீரர் நின்றிருந்தனர். ஆனால் வெள்ளையர் போர் தொடுக்காமல் ஏமாற்றிப் பின்வாங்கிச் செல்வதைக் கண்ட பாஞ்சைவீரர், வெகுண்டு பின் தொடர்ந்து, அவர்களை எட்டிப்பிடித்துப் போர் தொடுத்தனர். அப்பொழுது மாலை ஏழு மணி இருக்கும். இருதிறத்தவருக்கும் கடும் போர் மூண்டது. ஆயினும் இருளில் இனம் தெரியாமல் போகவே, பாஞ்சைவீரர் மீண்டும் தம் கோட்டையை அடைந்தனர். வெள்ளையர் படை பாளையங்கோட்டையை நோக்கி விரைந்து சென்றது.

**கும்பினியாரின் சீற்றமும் பாஞ்சைவீரரின் களிப்பும்**

ஊமைத்துரையின் மேல் சீமைத்துரை எடுத்த படையெடுப்பு நாட்டில் நகைப்புக்கு இடமாயிற்று. வெள்ளையர் தளபதி நாணத்தினால் தலைகுனிந்தான். வெள்ளையரின் ஆயுதங்கள் பலவற்றைப் பாஞ்சைவீரர் கைப்பற்றிக்கொண்டனர். தம்மில் பலர் மடிந்தனரேனும், வெள்ளையர் படையெடுப்பை அவலமாக்கி விட்டதை உன்னியுன்னிப் பாஞ்சைவீரர் களிப்படைந்தனர். தளபதி மெக்காலே, நிலைமையை விளக்கி, கும்பினித் தலைவருக்கு ஒரு முடங்கல் அனுப்பினான்; வெவ்வேறிடங்களிலிருந்து படைகளை வரவழைத்துக் குவித்தான். இவ்வாறு மீண்டும் போர் புரிய ஆயத்தம் செய்து கொண்டிருந்தான்.

## 6. தூத்துக்குடியில் பாஞ்சைவீரர்

### பாஞ்சையர் போர்க்கருவிகளைத் திரட்டுதல்

இங்ஙனம் வெள்ளையர் தமது படைபலத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கையில், பாஞ்சைப்பதியில் ஊமைத்துரையும் வாளாவிருக்கவில்லை: இரவும் பகலும் விழிப்புடனிருந்து, படைபலங்களைப் பெருக்கி, போர்க் கருவிகளைத் தொகுத்து, தேவையான அரண்களை அமைத்து, நிலைமையைச் சீர்திருத்திக் கொண்டார். முன்னம் பாளையக்காரரிடமிருந்து பறித்துக் கொண்ட ஆயுதங்களைக் கும்பினியார் சிந்துபூந்துறையிலும் ஸ்ரீவைகுண்டத்திலும் சேமித்து வைத்திருந்தனர். அவ் விடங்களிலிருந்து ஆயுதங்களைக் கவர்ந்து வருவதற்கு ஒரு படையை ஊமைத்துரை ஏவினார். அப்படையினர், அங்கிருந்த காவலரை விரட்டியடித்து, ஆயுதங்களைக் கவர்ந்துகொண்டு மீண்டு வந்தனர். போர்க்கருவிகளைக் கண்ட மன்னர், வெள்ளையர் ஆட்சியைக் குலைத்து, அவர்களைப் பூண்டுடன் இந்நாட்டைவிட்டு விரட்டு வதே முதல் வேலை என்று முடிவு செய்தார்; தம் அண் ணனைக் கொன்று, அரசினைக் கவர்ந்து, தமக்கு இன்னல் பல இழைத்துள்ள கும்பினியார் மீது வஞ்சம் தீர்க்க முனைந்தார். அவருடைய திட்டங்களில் பகைவரின் ஆயுதங்களைக் கவர்வது ஒரு முக்கியமான திட்டமாக இருந்தது.

### காடல்குடியில் கைகலப்பு

இதற்கிடையே பாஞ்சையைச் சேர்ந்த காடல்குடி என்னும் கிராமத்தைக் கைப்பற்றக் கும்பினியார் ஒரு

படையை அனுப்பினார்கள். அத்தப் படையெடுப்புச் செய்தியை முன்னதாகவே அறிந்த ஊமைத்துரை, தமது படை வீரரை அங்கே அனுப்பினார். எதிர்பாராத விதமாக வந்த பாஞ்சையரைக் கண்ட கும்பினிப்படைகள் உறுதி குலைந்து நின்றன. இருதிறத்தவருக்கும் கடும்போர் மூண்டது. முடிவில், உயிருக்குத் துணிந்து உறுதியுடன் போராடும் பாஞ்சைவீரருக்கு எதிராகத் கும்பினிப்படையினரால் நிற்க இயலவில்லை. மாண்டவர் போக மற்றவருடன் கும்பினிப்படைத்தலைவன் பாளையங்கோட்டையை அடைந்தான். மேலும், பாஞ்சைப் படைகள் கும்பினியாரின் பாதுகாப்பிலிருந்த ஸ்ரீவைகுண்டத்தையும் கைப்பற்றிக் கொண்டனர். அதனையறிந்த கும்பினிப்படைத்தலைவன், அந்நகரை மீட்க ஒரு பெரும் படையை ஏவினான். மூன்று நாள் போருக்குப் பின் வெள்ளையர் படை பின்வாங்கிச் சென்றது.

### வெள்ளையரின் நடுநிலையுணர்ச்சி

இவ்வாறு பகை வளர்ந்து கொண்டே போயிற்று. வெள்ளையரில் நடுநிலையுணர்ச்சி மிகுந்த சிலர், பாஞ்சைத்தலைவரின்மீது பகை வளர்த்துக்கொண்டது தவறு என்று கருதினர். ஆயினும் நிலைமையைச் சீர்திருத்த ஒருவரும் முயலவில்லை. கும்பினித் தளபதிகளுள் சிறந்தவரான **ஜெனரல் வெல்ஷ்** என்பார், 'கட்டபொம்மனையும் அவரது உறவினரையும் சிறையில் அடைத்து வைத்ததுடன், கோட்டையையும் தரைமட்டமாக்கியது நேர்மையல்ல' என்னும் பொருள்படக் கூறியுள்ளார். ஆயினும் என்ன? அது உணர்ச்சியுடன் நின்றதேயன்றிச் செயலில் காட்டப்படவில்லை.

## பாஞ்சையர் தூத்துக்குடியைத் தாக்க முனைதல்

தூத்துக்குடியில் கும்பினியார் ஒரு கோட்டையை அமைத்திருந்தனர். அதில் பண்டகசாலைகள் பல இருந்தன. ஆழ்கடல் வழியாகச் சரக்குகளை ஏற்றி அனுப்புவதற்கும், வெளிநாடுகளிலிருந்துவரும் சரக்குகளை இறக்கிக்கொள்வதற்கும் தூத்துக்குடி வசதியாக இருந்தது. தூத்துக்குடித் துறைமுகத்தில் ஆங்கிலேய வணிகர் குடியேறி யிருந்தனர். அது மிகுந்த பாதுகாப்புடன் இருந்தது. தென்னிந்தியாவில் ஆங்கில ஆட்சிக்கு அக் கோட்டை ஓர் அரண்போலிருந்தபடியால், அதைக் கைப்பற்றத் திட்டமிட்டார் ஊமைத்துரை. அதன் விளைவாகச் சேனைத்தலைவர் பதின்மரின்கீழ் எண்ணூற்றெழுபது போர்வீரரைத் திரட்டித் தூத்துக்குடியைத் தாக்க அனுப்பினார்.

## கும்பனிபடைத் தலைவன் சிறைப்படுதல்

பாஞ்சைப்பதிக்குத் தென்கிழக்கில் பதினேழு கல் தொலைவில் தூத்துக்குடி உள்ளது. பாஞ்சைப்படைகள் மார்ச்சு மாதம் ஏழாம் தேதி மாலை பாஞ்சை நகரிலிருந்து புறப்பட்டன; விடியுமுன் தூத்துக்குடியை அடைந்தன. பாஞ்சைப்படைகள் கோட்டையை நான்கு பக்கங்களிலும் அணியணியாகச் சூழ்ந்துகொண்டன. பலவகைப் போர்க்கருவிகளைத் தாங்கித் துணிவுடன் நின்ற பாஞ்சைப் படைகளைக் கண்ட கும்பினி வீரர், சிந்தை கலங்கிச் செயலழிந்து திகைத்து நின்றனராயினும், விரைவில் துணிந்து எதிர்த்தனர். பாஞ்சை வீரர் கூட்டமாகத் திரண்டு வெள்ளையருடைய படை

களை விரைந்து தாக்கவே, பகைவர் பறந்து சென்றனர். கும்பினிப்படைத் தலைவன் பாஞ்சையரால் கைது செய்யப்பட்டான். கோட்டையினுள்ளே சில போர்வீரர் புகுந்து, போர்க்கருவிகளைத் தேடிக் குவித்தனர்.

## சிறைப்பட்ட வெள்ளை வீரனுக்கு விடுதலை !

போரில் கைது செய்யப்பட்ட படைத்தலைவன் கதிகலங்கி நின்றான் ; உயிர் போய்விடும் என்று உள்ளங் கலங்கினான். அவன் மணமாகாத வாலிப வயதினன். ஆயுதந்தாங்கிச் சூழ்ந்து நின்ற படைவீரரிடையே அவனிருந்த நிலையைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவனுக்கு நமது நாட்டு மொழிகள் தெரியாது. அவனது நிலையைக் கண்டு பாஞ்சைப் படைத்தலைவன் இரக்கம் கொண்டான் ; அவனுக்கு யாதொரு துன்பமும் நேரிடக்கூடாதென்று தன் படைவீரருக்கு ஆணையிட்டான் ; அவனையும் தன் அருகிலழைத்துப் பரிவு காட்டினான். உள்ளங்கலங்கித் திகைத்துநின்ற அவ்வெள்ளைத் தளபதி, படைத்தலைவனுடைய பரிவைக்கண்டு, மனந் தெளிந்து, முகமலர்ந்து, அவனை நன்றியுடன் நோக்கினான். பாஞ்சைப் படைத்தலைவன் அவனைப் பார்த்து, "உம்மை விடுதலை செய்தால் இப்பொழுதே உமது நாட்டுக்குச் செல்வீரா ?" என்று சைகை மூலம் வினவினான். அவன் தலையை அசைத்துத் தன் உடன்பாட்டைத் தெரிவித்தான். உடனே படைத்தலைவன் அவனை அலைவாய்க்கரைக்கு அழைத்துச் சென்று, அங்கிருந்த ஒரு மீன் பிடிக்கும் தோணியில் ஏற்றிக் கடல் வழியாக அனுப்பினான். பகைவரிடமும் பரிவுகாட்டும் பண்பு பாஞ்சைவீரரிடம் பெரிதும் அமைந்திருந்தது என்

பதற்கு இந்த ஒரு சான்று போதும் அன்றோ ? இச்சம்ப வம்பற்றி ஒரு ஆங்கிலேயன் எழுதியுள்ள குறிப்புரையில், "பகைவர் படைத்தலைவனைப் பரிவுடன் நடத்தி, படகிலேற்றி யனுப்பியது பாஞ்சைவீரரின் பெருந்தன்மையைக் காட்டுகிறது" என்று புகழ்ந்துள்ளான். பகைவரும் புகழ்ந்து போற்றும் இப்பண்பினை நினைந்து நாம் பெருமிதம் கொள்வோமாக!



# 7. கருணைக் கடல்

## தூத்துக்குடியில் கும்பினித் தலைவன் சிறைப்படுதல்

கைது செய்த தளபதியைக் கடல் கடத்திவிட்டுப் பாஞ்சைப்படைத் தலைவன் மீண்டும் வருவதற்குள், அப் படைவீரர் கும்பினியாரின் இடங்களை யெல்லாம் கைப் பற்றிக்கொண்டனர். அங்கிருந்த பண்டகசாலைகளைக் கைப்பற்றி, அவற்றுக்குத் தகுந்த காவலை அமைத்து விட்டு, பல இடங்களைப் பார்த்துக்கொண்டு வரும் பொழுது, ஓரிடத்தில் ஒரு மாளிகையைக் கண்டு அத னுள்ளே புகுந்தனர்.

அம்மாளிகையில்தான் கும்பினித் தலைவன் குடி யிருந்தான். கோட்டை, பகைவர் வசமானதை யறிந்த அவன், தனது மாளிகையை விட்டு வெளியேறாமல் மறைந்திருந்தான். அவனது பெயர் **பாக்கட்** (Baggot) என்பது. அவனுக்கு அப்பொழுது முப்பத்தெட்டு வயதிருக்கும்; வசீகரமான தோற்றமுடையவன். அவனைக் கண்ட பாஞ்சைவீரர், அவனை வளைத்துச் சிறை செய்தனர். அவனை அவ்வீரர் விடுதலை செய்ய வில்லை; அவனது நிலையைக் கண்டும் மனமிரங்கவில்லை; கொள்ளை கொண்ட பொருள்களுடன், பாஞ்சைவீரர் அவனையும் தம்முடன் கூட்டிக்கொண்டு, பாஞ்சை நகரை நோக்கி வெற்றி முழக்கத்துடன் விரைந்து சென் றனர். அவர்கள் நடுவில் அவ்வெள்ளையனும் நடந்து சென்றான். வெள்ளைத்துரை ஒருவன் பாஞ்சாலங் குறிச்சி வீரரிடம் சிறைப்பட்டான் என்ற செய்தி நெடு

கிலும் பரவவே, அக்காட்சியைக் காண்பதற்குத் திரளான மக்கள் வழிமுழுதும் திரண்டு நின்றனர். ஆங்காங்கே படைத் தலைவனுக்கு மலர்மாலை சூட்டி மரியாதை செய்தனர். வெற்றிப் பெருமிதத்துடன் பாஞ்சைப்படைவீரர் தம்மூரை யடைந்தனர்.

**ஊமைத்துரையின் மனப்பண்பு**

பாஞ்சையை யடைந்த படைத்தலைவன், கைப்பிடித்த சீமைத்துரையை ஊமைத்துரையின் முன்னால் கொணர்ந்து நிறுத்தினன். அயலிருந்தவர் அக்காட்சியைக் கண்டு வேடிக்கை பார்த்து நின்றனர். அவையில் அமர்ந்திருந்த அரசனைக் கண்ட அயலான் துயரக்குறிகளுடன் நாணி நின்றான், அவனது நிலையைக்கண்ட மன்னவர் அவன்மீது இரக்கம் கொண்டார். அவருக்கு என்றும் வெள்ளையர்மீது வஞ்சம் இல்லை; வெள்ளையரின் ஆட்சி வெறியை மட்டும் வெறுத்தார். **காந்தியடிகளும்** தனிப்பட்ட வெள்ளையரைப் பகைக்கவில்லை; வெள்ளையரின் ஆட்சி முறையை மட்டுமன்றோ வெறுத்தார்? இவ்விருவர்தம் உள்ளமும் ஒன்றியிருத்தலை ஈண்டுக் காண்கிறோம். ஊமைத்துரை அவ்வெள்ளையனை அவமதிக்கவில்லை; அவன்பால் அன்பு செலுத்தினர், "நீர் அஞ்சவேண்டாம். உமக்கு யாதொரு இடையூறும் நேரிடாது". எமக்கும் கும்பினியாரின் ஆட்சியின்மீது தான் பகை; அவர்களது ஆட்சியை ஒழித்தபின் உம்மை உமது நாட்டுக்கு அனுப்பி விடுவோம். அதுவரையில் நீர் எம்முடன் இருக்கவேண்டும்" என்று ஆதரவுடன் அடைக்கலம் அளித்து, அருகிலிருந்த காவலரை விளித்து, அவனைச் சிறையில் அடைத்து வைக்குமாறு கட்டளையிட்டார்.

## பாஞ்சைவீரரின் இயற்கைப் பண்பு

பாஞ்சைப்படைத்தலைவன் தான் சிறைப்படுத்திய தளபதியை மனமிரங்கி விடுதலை செய்தான்! பாஞ்சை மன்னர் தம்முன் நின்ற கும்பினித் தலைவனைக் கொல்ல மனமின்றிக் காவலில் வைத்தார்! இவற்றின் வாயிலாக பகைவனையும் பரிவுடன் நடத்தும் பெரும்பண்பு பாஞ்சைவீரரிடம் இயற்கையாக அமைந்திருந்ததென் பது நமக்குப் புலனாகிறது. சிறையில் வைக்கப்பட்ட வெள்ளைத்துரையின் மீது மன்னர் மனைவி **சவுந்தரவடிவு** பெரிதும் இரக்கம் கொண்டு, அவனைப் பரிவுடன் நடத்து மாறு சிறைக்காவலருக்கு ஆணை யிட்டாள்.

## வெள்ளைமாதின் துணிவு

ஓர் ஆங்கிலேயன் பாஞ்சைச் சிறையில் அடை பட்டிருந்தது வெள்ளையருக்குப் பெரிதும் அவமானமா யிருந்தது. அத்துரையின் மனைவி தன் கணவனுக்கு நேர்ந்த இன்னலைக் கண்டு துடியாய்த் துடித்தாள்; செய்வதென்னவென்று அறியாது அலமந்து நின்றாள். அவளது பெயர் **மேரி வினோலா** (Mary Vinola) என்பது. பின்பு அவள் ஒருவாறு மனம் தேறி, பாஞ் சைக்குச் சென்று, அதன் பதியைக் கண்டு, தன் கணவனை மீட்டு வர உறுதிபூண்டாள். ஆங்கிலேயர் எவரும் அவளுடன் செல்ல இசையவில்லை. இறுதியாக, அம்மாது மனம் துணிந்து, தனிமையாகவே பாஞ்சையை நோக்கிப் புறப்பட்டுக் கால் நடையாகவே கடுகி நடந்து மீட்டுவரச் சென்றாள். அவளுக்குத் தமிழ் பேசத் தெரி யாது. கோட்டையை யடைந்து காவலாளரை அணுகி,

மன்னனைக் காணவேண்டும்' என்று சொல்லாமற் சொல்லி நின்றாள். அவளது நிலையைக் கண்ட காவலர், மன்னரிடம் சென்று, ஒரு வெள்ளைமாது அவரைக் காண விரும்புவதாக அறிவித்தனர். மன்னவரும் மன மிரங்கி, அவளைக் காண இசைந்தார்.

## கோமகன், துரையை விடுதலை செய்தல்

உள்ளே சென்ற அக்குலமகள், மன்னவரைக் கண்டு வணங்கி, கண்ணீருகுத்து நின்று, தனக்கு மங்கலப் பிச்சை அருளுமாறு வேண்டி நின்றாள். அவளது நிலையைக் கண்ட கோமகன் உளங்கனிந்து, அபயம் அளித்து, அருகிலிருந்த இருக்கையில் அமர்த்தி, ஏவலாளரை விளித்து, சிறையிலிருந்த துரையை அழைத்து வருமாறு ஏவினார். அவைக்கு வந்த வெள்ளைத் துரை தம் ஆருயிரனையாளைக் கண்டு மனமகிழ்ந்தானாயினும், அவமானத்தால் அடங்கி நின்றான். ஊமைத்துரை அவ்விருவரையும் அருகிலழைத்து, ஆறுதல் மொழிகளைக் கூறி, பாலும் பழமும் பரிந்தளித்து, பட்டாடையொன்றை அம்மாதுக்குப் பரிசிலளித்து, அவளை நோக்கி, "உனக்காக உன் கணவனை இன்று விடுதலை செய்கிறேன். இவரை அழைத்துச் செல்க" என்று அருள்புரிந்தார். அச்சொற்களைக்கேட்ட வெள்ளைத்துரை வியப்புடன் திகைத்து நின்றான். "நாம் இனி மீளமாட்டோம்; வாழ்வின் இறுதியை அடைந்து விட்டோம்" என்றெண்ணிச் சிறையில் உள்ளம் நொந்து கிடந்த வெள்ளைத் துரை, கோமகனது உள்ளக்கனிவைக் கண்டு வியந்து நின்றான்! பாஞ்சை மன்னர், துரையைச் சிறை செய்தபொழுது அவனிடமிருந்து கவர்ந்த




சிறைப்பட்ட சீமைத்துரையை ஊமைத்துரை விடுதலை செய்தல்

பொருள்களை யெல்லாம் அவனிடமே கொடுத்து, ஒரு பெட்டி வண்டியில் கணவனையும் மனைவியையும் ஏற்றி, தகுந்த காவலுடன் தூத்துக்குடிக்கு அனுப்பினர். அவ்விருவரும் பாஞ்சையதிபரின் பெருந்தன்மையை நினைந்து நினைந்து வியந்து புகழ்ந்தவாறே சென்றனர்.

**கைதியிடத்திலும் கருணை!**

கைதியிடத்திலும் கருணை காட்டிய கோமகனை வெள்ளையரும் புகழ்ந்தனர். கொடிய பகையிலும் கருணை காட்டிய இவருடைய மனப்பண்புதான் என்னே! இதற்கும், கட்டபொம்மனிடம் கடும்பகை பூண்டு, அவரைக் கயத்தாற்றில் கொலை செய்த வெள்ளையர் தளபதியின் செயலுக்கும் உள்ள வேற்றுமைதான் என்னே! இதை உன்னுந்தோறும் நம் நாட்டவரின் மனப்பண்பு ஏற்றமுடன் தோற்றமளிப்பதை உணர்கிறோமல்லவா?



## 8. படுகளம்

### ஊமைத்துரையின் ஆட்சிமுறை

ஊமைத்துரை, வெள்ளைக் கும்பினியாரை நாட்டிலிருந்து அகற்றுவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தாரேனும், தமது ஆட்சி முறையிலும் கவனம் செலுத்தி வந்தார். தாம் கும்பினியாரிடமிருந்து கைப்பற்றிய இடங்களிலெல்லாம் பாதுகாப்புக்காகப் படை வீரரை அமர்த்தினர். குடிமக்களுக்கு யாதொரு கெடுதியும் நேரிடாவண்ணம் அவர்களுக்கு இதம் புரியவேண்டும் என்று தமது ஊழியர்களுக்கு ஆணை அனுப்பினர். பாஞ்சாலங்குறிச்சி ஜமீனைப் பத்துப் பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தலைவனை நியமித்து அரசியலை நடத்தி வந்தார். பாஞ்சையில் போர்க்கருவிகள் வந்து குவிந்த வண்ணமிருந்தன. பல விடங்களில் போர்க் கருவிகள் செய்யத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. வாள், வேல், வல்லயம், கண்டகோடாலி, பிண்டிபாலம், பூண்கள் அமைந்த கம்புகள் முதலான ஆயுதங்கள் தினந்தோறும் தலைநகரில் வந்து சேர்ந்து கொண்டிருந்தன.

### ஒற்றர் மூலர் செய்தியறிதல்

ஊமைத்துரை, மாசி மாதம் சிவராத்திரி தினத்தன்று, தம் குலவழக்கப்படி சக்கதேவியை வணங்கி வழிபாடுகளைச் செய்தபின், **அரங்கமால்** என்னும் மாளிகையில் ஓர் அவையைக் கூட்டினர். தளபதிகள்

பலர் அங்கு கூடியிருந்தனர். பகைவரை வேரறுத்து, நாட்டில் தம் அரசை நிலைநாட்டி, அமைதிக்கு அடிகோலவேண்டும் என்றும், அதற்கு வெள்ளையரின் படைபலங்களைப்பற்றிய செய்திகளை ஒற்றர் மூலம் ஆய்ந்துணர வேண்டுமென்றும், தகுந்த போர்க்கருவிகளைத் தொகுத்துப் படைகளைப் பெருக்கிக்கொள்ளவேண்டுமென்றும் அச்சபையில் முடிவு செய்யப்பட்டது. அதன்படியே, பல ஊர்களிலிருந்து ஆறுயிரத்து எண்ணூறு வாலிபர் பாஞ்சையில் வந்து குழுமினர். அவர்களுக்குச் சிறந்த முறையில் படைக்கலப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்கிடையே பல ஒற்றர்களை வெளியில் அனுப்பி, வெள்ளையர் செய்யும் ஆயத்தங்கள் சம்பந்தமான செய்திகளைத் திரட்டினர் ஊமைத்துரை. கும்பினியார் ஒரு பெரும் படையெழுச்சிக்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்துகொண்டிருத்தலையும், அதற்கு எட்டையபுரத்தார் பேருதவி புரிவதையும் ஒற்றர் மூலமாக அறிந்தார். நாட்டைக் காட்டிக்கொடுத்து நலம் பெற விழைந்து நின்ற எட்டப்ப நாயக்கரைப்பற்றி ஊமைத்துரை என்ன எண்ணியிருப்பாரோ ?

## எட்டப்ப நாயக்கரின் துரோகம்

எட்டையபுரம் குறுநில மன்னர் **எட்டப்ப நாயக்கர்** கும்பினியாரின் தூண்டுதலுக்குச் செவி சாய்த்து, பாஞ்சாலங்குறிச்சியாரிடம் கடும்பகை கொண்டிருந்தார். ஊமைத்துரை சிறையினின்று மீண்டு வந்தது அவருக்குப் பெருங்கவலையை விளைவித்தது. கட்டபொம்மருக்குத் தாம் விளைவித்த கொடுமைகளுக்காகத் தம் மீது ஊமைத்துரை வஞ்சம் தீர்த்துக்கொள்ள

நினைப்பார் என்று அஞ்சினர். சிறையினின்று வெளி வந்தது மட்டுமல்ல; ஐந்தே நாட்களில் அரிய செயலை ஆற்றிப் பெரிய கோட்டையை அமைத்து, ஆயிரமாயிரம் போர்வீரரைத் திரட்டி நின்ற ஊமைத்துரையின் நிலை எட்டப்பரின் உள்ளத்தில் பொறாமைத் தீயை வளர்த்து வந்தது. அச்சமும் பொறாமையும் சேர்ந்து அவரது உள்ளத்தைக் கலக்கின. அவரிடம் படைவீரர் இல்லை; போர்க்கருவிகள் இல்லை; போர்ப் பயிற்சியுள்ள சேனைத் தலைவர் இல்லை. கும்பினியார்தாம் பாளையக்காரரிட மிருந்த போர்க்கருவிகள் அனைத்தையும் பறிமுதல் செய்துவிட்டனரே! ஆதலின், ஊமைத்துரை தம்மீது வஞ்சம் கொண்டு எதிர்த்தால் என்ன செய்வதென்று ஏங்கினர்; கலெக்டர் லூஷிங்டனைக் கண்டு தனக்கு ஆதரவளிக்குமாறு வேண்டினர். அவனும் அதற்கிணங்கி, தேவையான போர்க்கருவிகளையும் வெடி மருந்துகளை யும் கொடுத்ததுமன்றி, படைவீரரை ஆயத்தம் செய்து கொள்ளவும், கும்பினியாருக்குத் தேவையானபொழு தெல்லாம் படைகளைக் கொடுத்து உதவவேண்டுமென வும் ஆணை அனுப்பினன்.

## எட்டப்பர் படை திரட்டுதல்

கும்பனியாரிடமிருந்து கிடைத்த ஆயுதங்களைக் கொண்டு குவித்து, படைவீரரைத் திரட்டினர் எட்டப் பர். மொத்தம் இரண்டாயிரத்து எழுநூறு போர் வீரர் அப்படையில் சேர்ந்தனர். அவர்களுக்குச் சிறந்த பயிற்சியளிக்கத் திட்டம் வகுத்து, சேனைத்தலைவரையும் நியமித்தார் எட்டப்பர். இதன் பின்பு அவரது கவலை சற்றே குறைந்தது; உவப்பு ஓங்கி நின்றது; ஊமைத்

துரையின்மீது கும்பினியார் படையெடுக்கும் நாளை எதிர்பார்த்து நின்றார். அந்த நாளும் வந்தது. பாஞ்சாலங்குறிச்சி மீது படையெடுக்கத் திட்டமிட்டிருப்பதால், எட்டப்பர் தம் படைவீரருடன் மார்ச்சு மாதம் 30-ம் தேதிக்குள் பாஞ்சை போய்ச் சேரவேண்டும் என்னும் கருத்துள்ள கட்டளை கும்பினியாரிடமிருந்து அவருக்குக் கிடைத்தது. படைத்தலைவர்களாக இரு வெள்ளையர் வந்தனர். அனைவரும் பாஞ்சையை நோக்கிச் சென்றனர்.

## கும்பினிப்படைத்தலைவரின் திட்டம்

முன்னம் பாஞ்சையின்மீது நடத்திய படையெடுப்பில் தோல்வியுற்ற வெள்ளையர், மீண்டும் போருக்கு ஆயத்தம் செய்தனர். பல இடங்களிலிருந்து படைகள் வந்து குவிந்தன. அவையாவும், கயத்தாற்றுக்கு மேற்கேயிருந்த சமவெளியில் அமைக்கப்பட்ட கூடாரங்களில் தங்கியிருந்தன. பதினொரு வெள்ளையர் படைத்தலைவர்களாக அமர்த்தப்பட்டனர். தன் படைபலத்தைப் பார்த்து, இம்முறை பாஞ்சையை எளிதில் வென்றுவிடலாம் என்று உள்ளம் துணிந்தான் தளபதி மெக்காலே. படைத்தலைவருடன் பல ஆலோசனைகளைச் செய்து, படையெடுப்புக்குத் தேவையான வழிவகைகளை வகுத்தான். நாட்டின் தன்மையையும், எதிரியின் திறமையையும் கூர்ந்து கவனித்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். முன்போல் தோல்வியுற்று மீளக்கூடாது என்ற உறுதியுடன் எச்சரிக்கையாகத் திட்டங்களை அமைத்தான்.

## கும்பினிப்படை பாஞ்சையை நோக்கிப் புறப்படுதல்

மார்ச்சு மாதம் 30-ம் நாள் கும்பினிப்படை பாஞ்சையை நோக்கிப் புறப்பட்டது. அன்று விடியற் காலையில் பீரங்கி தாங்கிய வண்டிகள் முன் செல்ல, குதிரைப்படையும் காலாட்படையும் பின்னுல் அணி வகுத்துச் சென்றன. சேனுதிபதி மேஜர் மெக்காலே ஓர் உயர்ந்த புரவியின்மீது ஏறிச் சென்ருன். இரண்டு நாழிகைக்குள், படைகள் **ஒட்டரம்பட்டி** என்னுமூரை அடைந்து, அங்கே தங்கிக் காலை உணவு அருந்தின.

## பாஞ்சையர் கும்பினிப்படையை இடைவழியில் தாக்குதல் :—

இஃதிங்ஙனமிருக்க, கும்பினியாரின் படையெடுப்பை எதிர்பார்த்து நின்ற பாஞ்சையதிபர், வெள்ளையர் படை திரண்டு வருவதை ஒற்றர் மூலம் அறிந்தார்; உடனே முறையாகப் பாதுகாப்புக்களை அமைத்தார். எதிர்த்து வரும் படைகளை இடைவழியிலேயே மடக்கி முறியடிக்க முடிவு செய்தார். அம்முடிவுக்கிணங்க, எழுநூறு போர்வீரர் ஆயுதபாணிகளாக நள்ளிரவில் புறப்பட்டு இடைவழியில் மறைந்துகொண்டனர். அன்றும், மறுநாள் மாலை வரையிலும் பகைவர் படை காணப்படவில்லை; மாலை நான்கு மணிக்குக் கும்பினிப் பட்டாளம் வருவதைப் பாஞ்சைவீரர் கண்டனர்; உடனே கும்பினிப்படையைப் பாஞ்சைவீரர் வளைத்துக் கொண்டனர். எதிர்பாராத இந்தத் தாக்குதலைக் கண்ட கும்பினிப்படை திகைத்து நின்றது; ஆயினும் விரைவில் உணர்வடைந்து, பாஞ்சைவீரர்மீது குண்டு மாரி பொழிந்தது. இருதிறப் படைகளும் கைகலந்து

கடும்போர் புரிந்தன. பாஞ்சையர், தம் வாட்களையும் வேல்களையும் பகைவர்மீது எறிந்து படுநாசம் விளைவித்தனர்.

" இன்றைக் கிருந்தாலும் நாளைக் கிருந்தாலும்
என்றைக்கு மேழொரு நாள்இறப்போம் ;
அன்றைக்குச் சாவதை இன்றைக்குப் போரினில்
ஆக்கி யமர்வதே பாக்கியமாம் "

என்ற உறுதியுடன் பாஞ்சைவீரர் உயிரைத் திரணமாக மதித்துப் போரிட்டனர். ஆயினும் பீரங்கித்தாக்குதலுக்கு எதிர் நிற்க முடியாமல், மாண்டவர் போக மற்றவர் மீண்டு பாஞ்சைக்குச் சென்றனர். கும்பினிப்படைகள் பாஞ்சைக்கு வடமேற்கே ஒன்பது கல் தொலைவிலிருந்த **பசுவந்தனை** என்னுமூரையடைந்து, அங்கே பாடி அமைத்துக்கொண்டு தங்கியிருந்தனர். அவ்விடத்தில் எட்டப்ப நாயக்கர் தமது படைவீரருடன் வந்து அவர்களுடன் கலந்து கொண்டார்.

## வெள்ளையர் எள்ளி நகையாடுதல்

விடியுமுன் கும்பினிப்படைகள் பாஞ்சையை நோக்கிப் புறப்பட்டுச் சென்றன. பாஞ்சைக் கோட்டையைக் கண்டதும் வெள்ளையர் சிலர், அது மண்ணாலாக்கப்பட்டிருப்பதைக் கண்டு, எள்ளி நகையாடினர். அதன் உறுதிநிலையை முன்னமே அறிந்திருந்த மெக்காலே, தன் இனத்தவர்க்கு அக்கோட்டையின் வன்மையை எடுத்துக்கூறவே, அவர்கள் வியப்படைந்து திகைத்து நின்றனர். கோட்டைக்கு வடமேற்கே ஒரு மைல் தூரத்தில் **ஆத்தலோடை** என்னுமிடத்தில் பாசறைகளை அமைத்துக்கொண்டு கும்பினிப்படைகள் தங்கியிருந்தன.

## கும்பினிப்படைகளின் ஆயத்தம்

ஜெனரல் வெல்ஷ் என்ற கும்பினியார் படைத் தலைவன் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைப் "புரட்சி வீரரின் ஜிப்ரால்டர்" என்று தனது குறிப்பில் கூறியுள்ளான். **ஜிப்ரால்டர்** என்பது ஐரோப்பாக் கண்டத்தில் **ஸ்பெயின்** தேசத்திலுள்ள ஒரு கோட்டை. அது ஆழ் கடலின் அருகே மலைகளிடையே உள்ளது; அது போன்ற அரண் உலகில் எங்கணுமில்லை எனப் புகழ் பெற்றது. அதற்கு இணையாகப் பாஞ்சைக் கோட்டையை ஒரு வெள்ளையர் எடுத்துக் கூறினாரென்றால், அதன் பெருமையைப்பற்றி மேலும் கூறுவானேன்? பாஞ்சையை வென்றால் தென்னாடு முழுதும் வென்ற வாறு என்பதே இதன் கருத்தாம். வன்மை மிகுந்த அக்கோட்டையை உடைத்தெறிந்தாலன்றி ஊமைத் துரையை வெல்லமுடியாதென்று கும்பினிப்படைத் தலைவன் முடிவு செய்தான். அக்கருத்துக்கிணங்க, கோட்டைக்கு மேற்கிலும் வடக்கிலும் சிறிது தொலை வில் இரண்டு மண்மேடுகள் அமைக்கப்பட்டன. நீண் டிருந்த அம்மேடுகளில் பெரிய பீரங்கிகள் ஏற்றப்பட்டு, வரிசையாக வைக்கப்பட்டன. வெடி மருந்துகளும் குண்டுகளும் ஆங்காங்கே குவித்து வைக்கப்பட்டன. படைவீரர் அணிவகுத்து நின்று, தலைவனின் ஆணையை எதிர்நோக்கி யிருந்தனர்.

## பாஞ்சையரின் ஆயத்தம்

பாஞ்சையரும் வாளா இருக்கவில்லை. கோட்டை மதிலின் உட்புறத்தில் அதனேரத்தில் போர்க்கருவிகள்

மலே மலேயாகக் குவித்து வைக்கப்பட்டிருந்தன. கொத்தளங்களில் பழுதடைந்த பீரங்கிகளும், பின்னும் போர்க் கருவிகளும் குவிக்கப்பட்டிருந்தன. கவண்குறிக்கான இரும்புக்குண்டுகளும் கற்கூடைகளும் மதில் மீது ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்தன. நான்கு மூலேகளிலும் ஈயத்தையும் செம்பையும் உருக்குவதற்கும், அந்த அனற்குழம்பைப் பகைவர்மீது அள்ளி வீசுவதற்கும் தேவையான கொப்பரைகளும் தட்டுகளும் அடுக்கடுக்காக வைக்கப்பட்டிருந்தன. படைவீரருக்குத் தேவையான போர்க்கருவிகளே விரைந்து கொடுப்பதற்கென்று பலர் மதிலின்மேல் பரண்களே அமைத்துக்கொண்டிருந்தனர். முதல் நாள் இடைவழியில் நடந்த போரில் பலர் மாண்டனராயினும் மனந்தளராமல் "வெள்ளேயரை வேருடன் களேவேன்" என்று தருக்கி நின்ருர் ஊமைத்துரை. நாட்டில் செய்யப்பட்ட போர்க்கருவிகளேயே துணேயாகக் கொண்டு, பெரிய பீரங்கிகளேத் தாங்கிய கும்பினிப் படையை எதிர்க்கத் துணந்தார். இந்தச் செயல் அவரது மனவுறுதியையும் வீரத்தையும் எடுத்துக்காட்டுகிறது. மதிலுக்கு வெளியில் ஒரு முள் வேலி அமைக்கப்பட்டிருந்தது; பகைவர் எளிதில் கோட்டை மதிலே அணுகாவண்ணம் அது காத்து நின்றது. அலேகடல்போல் திரண்டு வந்த வெள்ளேயர் படையைக் கண்டு அஞ்சாமல் கருமமே கண்ணுகி நின்ருர் ஊமைத்துரை.

## வெள்ளே எலிகளே விரட்டுக !

"வெள்ளே எலிகளே விரட்டி ஓட்டவேண்டும்; எதிர்த்து நின்ருல் கொன்று குவிக்கவேண்டும்" என்று

வீறுடன் கூறினர் ஊமைத்துரை. வெள்ளேயரை 'எலிகள்' என்றதன் உட்கருத்து அறியத்தக்கதாகும். ஊமைத்துரையையும் 'கட்டபொம்மு' என்றே வெள்ளேயர் அழைத்து வந்தனர். அந்தப் பெயரைச் சுருக்கமாகக் 'கேட்' (Cat) என்றே வழங்கி வந்தனர். ஆங்கிலத்தில் 'கேட்' (Cat) என்ருல் 'பூனே' யல்லவா? பூனே எலிகளே வேட்டையாடுவதில் வியப்பில்லேயே! ஆயினும் ஒரு சுத்தவீரனேப் பூனே என்றழைப்பது இழிவன்ருே? அந்த இழிச் சொல்லுக்கு இணேயாகவே ஊமைத்துரை வெள்ளேயரை 'எலிகள்' என்ருர் போலும்! கோட்டை வாயில்களே நாற்புறத்திலும் ஆயுதபாணிகளான வீரர்கள் காத்து நின்றனர். ஊமைத்துரையும் போர்க்கோலம் பூண்டு 'தேவியே துணே' என்று உறுதியுடன் இருந்தார்.

## கோட்டை மதிலில் பிளவு கண்டது

காலேயில் கும்பினிப் படைகள் கோட்டையின் மேல் குண்டு மாரி பொழிய ஆரம்பித்தன. கோட்டை மதில் பிளப்பட்டவுடன் உள்ளே பாய்வதற்கு வீரர் அனேவரும் ஆயத்தமாக இருந்தனர். நண்பகல் வரையும் கோட்டையின்மேல் கொடிய குண்டுகள் பாய்ந்த போதிலும், பயன் ஏதும் காணப்படவில்லே; தினேயளவு மண்கூட இடிந்து விழவில்லே. அதனுல் கும்பினித் தளபதி திகைத்து நின்ருன்; "இது என்ன மாயக் கோட்டையோ?" என்று எண்ணமிடலானுன். பின்பு, கும்பினி வீரர் பீரங்கிகளேக் கோட்டைக்கு அருகில் கொணர்ந்து நிறுத்திக் குண்டுகளே மதில்மீது கடுமையாகப் பொழிந்தனர். எங்கும் இடிமுழக்கம் போன்ற

ஒலிகள் எழுந்தன. ஆயினும் மாலை நான்கு மணிவரை ஒரு பகுதியிலேனும் கோட்டை மதில் உடைபடவில்லை. அதன் பின்பு, வடமேற்கு மதிலில் சிறிதளவு பிளவு கண்டது. அது கண்ட கும்பினிப்படைகள் குதூகலித்துக் கொக்கரித்தன; படைவீரர் அனைவரும் ஒருங்கே திரண்டு, முள்வேலியைக் கடந்து கோட்டைக்குள் செல்லுமாறு படைத்தலைவன் கட்டளையிட்டான்.

## கும்பினிப்படைகள் நிலைகுலைதல்

கும்பினிப்படைகள் உள்ளே புகுவதைக் கண்ட பாஞ்சையர் வேல், வாள், வல்லயம் முதலான ஆயுதங்களால் அவர்களைக் குத்திக் கொல்லத் தொடங்கினர்; அவற்றின் விளைவாக வெள்ளையரில் பலர் உயிர் நீத்தனர். கும்பினியார் மீண்டும் குண்டுகளைத் தொடுத்துக் கடுமையாகச் சுட்டதால், பாஞ்சையரில் பலர் மாண்டனர். எங்கும் புகை படர்ந்து நின்றது; பல படுகொலைகள் நேர்ந்தன; எங்கும் பிணக்குவியல். ஒரு புறத்தில் ஏணி வைத்து மதில்மேல் ஏறுவதற்கு முயன்ற கும்பினிப் படைவீரர்களைப் பாஞ்சைவீரர் வல்லயங்களால் குத்தி வெளியே எறிந்தனர்; வில்வீரர் கற்குண்டுகளையும் இரும்புக்குண்டுகளையும் எடுத்துத் தொடுத்து எதிரிகள் மீது குறிபார்த்து எய்தனர். இவை எதிரிகளில் பலருக்குப் படுகாயங்களையும் நாசத்தையும் விளைவித்தன. கூர்மையான ஆயுதங்களால் குடல் சரிந்தும், உடல் சிதைந்தும், சிரமிழந்தும், கைகால் அழிந்தும், கும்பினிப் படைவீரரில் பலர் இறந்துவிட்டனர். இவ்வாறு பல கொலைகள் நிகழவே, கும்பினிப் படைகள் நிலைகுலைந்

தன. தளபதி, கலைந்த படைகளை மீண்டும் அணிவகுத்துப் போரிடுமாறு ஊக்கினன்.

## ஊமைத்துரையின் பெருந்தன்மை

பகைவரின் குண்டுவீச்சுகளைப் பொருட்படுத்தாது பாஞ்சையர் போர் செய்ததால், கும்பினிப்படைத் தலைவர்களில் பலர் வெட்டுண்டு தரையில் சாய்ந்தனர். மிகுதிப் படையை மீட்டுக்கொண்டு வெள்ளையர் தளபதி பாசறையை அடைந்தான். அன்று நடந்த போரில் பாஞ்சையரில் ஐந்நூறு பேர் மாண்டனர். பகைவரிலும் பலர் இறந்தனர்; பலர் படுகாயமடைந்தனர். வெள்ளையரின் தலைமைத் தளபதி மனம் நொந்து நாணத்தால் தலைகுனிந்தான். ஒரு பொட்டல்காட்டுச் சிற்றரசனிடம் இவ்வகையில் அல்லல்பட்டதை எண்ணி யெண்ணி வருந்தினன்; இரவு நெடுநேரம் வரையில் உறக்கமின்றிக் கவலையுடன் கண்விழித்திருந்தான். படை வீரர் அனைவரும் இரவில் யாது நேருமோ என்று அஞ்சி, மிகுந்த எச்சரிக்கையுடன் விழிப்பாகவே இருந்தனர். ஊமைத்துரை பகைவருக்கு அன்றிரவு இன்னல் பல இழைத்திருக்கக் கூடும். ஆனால், அவர் அவ்வாறு செய்யாதது அவருடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது.

## பாஞ்சையதிபரிடம் தூதுவனை அனுப்புதல்

காலையில் கும்பினித் தளபதி தன் படைத்தலைவர்களுடன் ஆலோசனை செய்தான். மதிலருகில் தனது படை வீரரின் சவங்கள் நாதியற்றுக் கிடந்தமை அவனுக்கு மிகுந்த வேதனையை விளைவித்தது. உடனே அவன் அப்பிணங்களை எடுத்துப் புதைக்கக் கருதினன்; அவ்

வாறு செய்வதற்குப் போர்வீரர்கள் சென்றால், அவர்களையும் பகைவர் கொன்றுவிடுவர் என்ற அச்சம் மேலிட்டது. ஆதலின், ஒரு தூதுவனைப் பாஞ்சையதிபரிடம் அனுப்பி, அவரது அனுமதியுடன் சவங்களை அப்புறப்படுத்த முடிவு செய்தான்.

## பாஞ்சையதிபரின் பெருநோக்கு

கும்பினித் தளபதி எப்ரல் மாதம் முதல் நாள் காலை, ஒரு கடிதத்துடன் இராணுவ அதிகாரி ஒருவனை ஊமைத்துரையிடம் தூதுவனாக அனுப்பினான். அத்தூதுவன், பச்சைக் கொடியை ஏந்திக்கொண்டு, கோட்டையை நோக்கிச் சென்றான். பச்சைக் கொடியைக் கண்ட கோட்டைக் காவலர், அவனை உள்ளே அனுமதித்தனர். உட்சென்றவன் ஊமைத்துரையைக் கண்டு வணங்கி, தளபதியின் கடிதத்தைக் கொடுத்தான். ஊமைத்துரையும் பகைவர் படைத்தலைவன் கோரிய வாறே அனுமதியளித்தார். அவரது வாய்மொழி உறுதியை வெள்ளையர் தளபதியிடம் தூதுவன் கூறினான். உடனே, பெரிய குழிகளைத் தோண்டி, அவற்றுள் சவங்களை எடுத்துப்போட்டு, மண்ணைமூடிப் புதைத்தனர்; வெள்ளையர் உடல்களைப் புதைத்துக் கல்லறைகள் கட்டினர். அன்று பகல் முழுதும் சவங்களைப் புதைப்பதிலேயே காலம் கழிந்தது. வெள்ளையர் படையில் பலர் இறந்ததுபற்றி நாட்டு மக்கள் களிப்படைந்ததுமன்றி, பாஞ்சையரின் தீரத்தைப் புகழ்ந்தனர். யாதொரு தடையும் சொல்லாமல், சவங்களை அகற்ற அனுமதியளித்த பாஞ்சையதிபரை வெள்ளையர் தளபதி வெகுவாகப் புகழ்ந்தான். ஆயினும், தனக்கு நேர்ந்த

சேதத்தை எண்ணி யெண்ணி உள்ளங்கலங்கினன். சிப்பாயைக் கண்டு அஞ்சியோடும் உள்ளம் படைத்த நாட்டுமக்களிடையே பாஞ்சைவீரர் மட்டும் சீறி எழுந்து போராடும் ஆண்மையைக் கண்டு வெள்ளை யரும் வியப்பெய்தினர்.

## கோட்டையைச் செப்பனிடுதல்

உடைபட்ட கோட்டை மதில் இரவோடிரவாகவே செப்பனிடப்பட்டது. வெற்றி பெற்ற களிப்பால் ஊமைத்துரை அயர்ந்திருக்கவில்லை; மிகவும் கவனத்து டன் மீண்டும் போர் புரிவதற்குத் தேவையான ஏற்பாடு களைச் செய்து வந்தார்.



## 9. *பாஞ்சையர் வீரம்*

### கும்பினித் தளபதி பாசறையைப் பலப்படுத்துதல்

உடைந்த உள்ளத்துடன் பாசறையில் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்த கும்பினித் தளபதி மெக்காலே, தனக்கு நேரிட்ட அவல நிலையை எண்ணி யெண்ணி வருந்தினான்; இருமுறை படையெடுத்தும் இறுதி வெற்றி காணாமல் இழிவு நேர்ந்ததை நினைந்து நினைந்து வேதனை யடைந்தான். தன்னிடமிருந்த படைபலத்தினால் பகைவரை வெல்ல முடியாது என்று முடிவு செய்தான். தோல்வி யடைந்தால் கும்பினியாட்சிக்கு அது சாவுமணியாகும் என்று அஞ்சினான். மீண்டும் பாளையங்கோட்டை அடைவது அவமானம் என்றும் கருதினான். ஆதலின், பாசறையைப் பலப்படுத்தி அங்கேயே தங்கியிருந்தனர் கும்பனிப் படைவீரர்.

### கும்பினித் தளபதியின் திட்டம்

கும்பினித் தலைவருக்குப் பாஞ்சையரின் வலிவைப் பற்றி எழுதி, பெரிய படைகளையும் பீரங்கிகளையும் விரைவில் அனுப்பவேண்டும் என்று தளபதி கோரினான். சென்னையிலிருந்த கும்பினித்தலைவர் அக்கடிதத்தைக் கண்டு திகைத்தார்; வெள்ளையரில் பலர் இறந்துவிட்டதை அறிந்து நெஞ்சம் கொதித்தார்; கும்பினியாட்சிக்கு இறுதிக்காலம் வந்ததோ என ஐயுற்றார். இந்நாட்டின் பல பகுதிகளை எளிதில் கைப்பற்றிய வெள்ளையருக்கு, தென்னாட்டில் ஒரு சிறு பாளையக்காரனிடம்

தோல்வி நேர்ந்ததை நினைத்து வருந்தினர். இவ்வாறு படைத்தலைவரும் கும்பினியதிபரும் திகைத்து நிற்கையில், இரண்டு நாட்கள் கடந்து சென்றன. மூன்றும் நாள் கோட்டைக்குள் உணவுப் பொருள்கள் செல்லாதவாறு முற்றுகை செய்ய முடிவு செய்தான் படைத்தலைவன். 'வெளியூர்களிலிருந்து கோட்டைக்குள் உணவுப் பொருள்கள் செல்ல முடியாமற் செய்தால், உணவுக்கு வழியின்றிப் பட்டினியால் பாஞ்சையர் பதைபதைத்து நிற்பர்; அந்நிலையில் பணிந்து விடுவர்' என்று துரை எண்ணமிட்டான். அவனது படைகளுக்கு வெளியிடங்களிலிருந்து உணவுப் பொருள்கள் வந்துகொண்டிருந்தன. பகைவரைப் பணியவைப்பதற்கு இதுவே ஏற்றவழி எனத் தேர்ந்து, அதற்குத் தேவையான திட்டங்களை வகுப்பதில் முனைந்தான்.

### ஊமைத்துரையின் மறுமொழி

இந்த முடிவு ஊமைத்துரைக்குச் சின்னுட்களுக்குப் பின்னரே தெரியவந்தது. அவரிடம் மூன்று மாதங்களுக்குத் தேவையான உணவுப் பண்டங்கள் இருந்தன; மேலும் தேவையானவற்றையும் சேமித்து வைத்தார். 'உண்டி சுருங்கினுல் ஊக்கம் சுருங்கும்' அல்லவா? ஆதலால், படைவீரருக்கு யாதொரு குறையும் நேராவண்ணம் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். வெள்ளையருக்கு வெளியிடங்களிலிருந்து வந்து கொண்டிருந்த உணவுப் பொருள்கள் வராமலிருப்பதற்கும் ஏற்பாடுகளைச் செய்தார். நாட்டு மக்கள் ஊமைத்துரையின் ஆணையை மதித்து கும்பினிப்படைகளுக்கு உணவுப் பொருள்களை வழங்க விரும்பவில்லை : படைவீரரே அய

விடங்களுக்குச் சென்று வாங்கி வருவாராயின், இடை வழியில் பாஞ்சையர் அவர்களை எதிர்த்து, அவற்றைப் பறித்துக்கொண்டு சென்றனர்.

## ஒரு சிறிய கைகலப்பு

இவ்வாறு இருதிறத்தவரும் பகையை நீடித்துக் கொண்டே சென்றனர். நாளாக ஆகக் கோட்டைக் குள் கால்நடைகளுக்குத் தேவையான புல் முதலான தீனி வகைகள் குறையலாயின. ஒரு நாள், பாஞ்சை வீரரில் சிலர் கூலியாட்களைப்போல் வேடம் பூண்டு, கோட்டைக்கு வெளியில் புல் அறுத்துச் சுமைகளாகக் கட்டிக்கொண்டிருந்தனர். அவர்கள் பாஞ்சைப் படையினர் என்று எட்டப்பர் கும்பினிப்படைத்தலை வனிடம் கூறினர். உடனே அவன் தன் சிப்பாய்களை அனுப்பி, அந்தப் புற்கட்டுகளைப் பறித்து வருமாறு ஏவினன். அவ்வீரர் புல் அறுத்தவர்களைச் சூழ்ந்து கொண்டு, கட்டுகளைப் பறிக்க முற்பட்டனர். பாஞ் சையர் அமைதியுடன் கேட்டுக்கொண்டும், பகைவர் கட்டுகளை எடுத்தனர். உடனே கைகலப்பு ஏற்பட்டு, கும்பினி வீரரில் அறுவர் மாண்டனர். அதற்குள் கோட் டைக்குள்ளிருந்து அறுநூறு வீரர் விரைந்து வந்தனர்; அதனைக் கண்ட பகைவர் ஓட்டமெடுத்தனர். பாஞ்சை யரும் புற்கட்டுகளை எடுத்துக்கொண்டு கோட்டைக்குள் சென்றனர். இதேபோல் மேலும் சிறு கலகங்கள் பல நேர்ந்தன.

## வெள்ளையர் பாசறையில் வேட்டை

பாஞ்சையரும் வாளா இருக்கவில்லை. கும்பினிச் சிப்பாய்களைத் தனியாகக் கண்டபோது, அவர்களுடைய

ஆயுதங்களைப் பறித்துக்கொண்டனர். பீரங்கி மேடுகளை அழித்தனர். ஆயினும் போர்வீரருக்கு வேறு இன்னல்கள் இழைக்கவில்லை. ஏப்ரல் மாதம் 24-ம் தேதி, பாஞ்சைவீரரில் இருவர் பகைவர் பாசறையினுள்ளே புகுந்து வேட்டையாடி வரத் திட்டமிட்டனர். பாசறை சிறந்த பாதுகாப்புடன் இருந்து வந்தது. இருவரும் பிறரறியாமல் பதுங்கிப் பதுங்கிச் சென்று பாடிவீட்டை யடைந்தனர். அங்கே, குதிரைகளுக்குக் காணம் வேக வைக்கும் இரண்டு அண்டாக்களின் மறைவில் ஒளிந்து கொண்டனர் ; சமயம் பார்த்துப் பாசறைக்குள் புகுந்து, இரண்டு கல்வெடிகளைத் தரையில் ஓங்கி அடித்தனர். உடனே எழுந்த பேரொலியில், கண்ணயர்ந்திருந்த போர்வீரர் அனைவரும் விழித்துக்கொண்டனர்; பகைவர் உட்புகுந்து விட்டதாக நினைத்து, இருளில் ஒருவர் மேலொருவர் மோதிக்கொண்டும், ஒருவரை யொருவர் கட்டிக்கொண்டும் குழப்பம் விளைவித்தனர். பாசறையினுள் புகுந்த இருவரும் தம் வாட்களுக்குப் பலரைப் பலியாக்கி வெளியே சென்று மறைந்தனர். குழப்பம் அடங்கினதும், விளக்கொளியில் பார்த்தபொழுது, கும்பினிப் படைவீரரே மாண்டு கிடப்பதைக் கண்டனர்! இவ்வாறு பல அல்லல்களுக்கு அவர்கள் ஆளாயினர்.

## கும்பினியார் தம் படைபலத்தைப் பெருக்குதல்

ஆயினும், கும்பினிப்படைத்தலைவன் உறுதியுடன் நின்றான் ; படைகளைக் கலைக்கவில்லை ; புதிய படைகள் வருவதை எதிர்பார்த்திருந்தான். சென்னையில் கும்பினி யதிபராயிருந்த **லார்டு எட்வர்டு கிளைவ்** என்பவர் பல இடங்களிலிருந்தும் படைகளைத் திரட்டினார் ; பெரும்

பீரங்கிகளைச் சேகரித்தார். படைகளுக்கு முதல்வராகக் **கர்னல் ஆக்னியூ** (Colonel Agnew) என்ற சிறந்த போர் வீரர் அமர்ந்தார். அவருக்குப் பாஞ்சையின்மேல் படையெடுப்பதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. அவருக்குத் துணைவராக வெள்ளையர் ஒன்பதின்மர் அமர்த்தப்பட்டனர். அந்தப்படைகள் திருச்சிராப்பள்ளியிலிருந்து அணியணியாகப் புறப்பட்டு, மே மாதம் 21-ம் தேதி மாலை ஜெனரல் மெக்காலேயின் பாசறையை யடைந்தன. மெக்காலே, ஆக்னியூவை இராணுவ முறையில் வரவேற்றான். புதிய தலைவரைக் கண்ட படைகள் களிப்பு மிகுதியால் ஆரவாரம் செய்தன. அந்தப் படையில் பன்னீராயிரவருக்கும் அதிகமான போர்வீரர் இருந்தனர். இரண்டு தலைவர்களும் இரவு நெடுநேரம் வரையில் மேலும் ஆற்றவேண்டிய செயல்களைக் குறித்து ஆலோசித்தனர். பாஞ்சாலங்குறிச்சியாரது ஆற்றலையும், போர்த்திறமையையும் குறித்து மெக்காலே ஆக்னியூவுக்கு எடுத்துரைத்தான். ஊமைத்துரையை அடக்காமற்போனால், கும்பினியாட்சி நாட்டில் அழிந்துவிடும் என்று இருவரும் ஒருமனதாகக் கருதினர்.

## ஊமைத்துரையின் உள்ளத்துணிவு

இவ்விவரங்களைக் கேள்வியுற்ற ஊமைத்துரை மனந் தளரவில்லை. 'வெள்ளையர் படைகளைப் பதர்களைப் போல் ஊதிவிடுவேன்' என்று சொல்லாமற் சொல்லி நின்றார். அவரது உள்ளத்துணிவு உச்சநிலையிலிருந்தது.

"ஆயிரம் அக்கினிச் சென்னல்கள் வந்தாலும்
ஆண்டவன் பாஞ்சைமன் அஞ்சாமல்
பாயும் சிங்கேறுபோல் ஏறி நின்றான் அந்தப்
பாண்டியன் வீரமார் கூறவல்லார்?"

என்ற நாட்டுப் பாடல் அவரது உள்ளத்தின் உறுதியை விளக்குகிறது.

## பீரங்கி முழக்கம்

இரவு கழிந்தது; 'கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தடைந்தான்.' கருதிய செயல்களைச் செய்து முடிக்க வெள்ளையர் விரைந்தனர். மே மாதம் இருபத்துமூன்றும் நாள் காலை, கோட்டையை நோக்கிப் பீரங்கிகள் வரிசையாய் நின்றன. அவை கோட்டை மதிலுக்குத் தென் மேற்கே அறுநூறு கஜ தூரத்தில் ஒரு மணற்குன்றின் மேல் பதிக்கப்பட்டிருந்தன. குதிரைப்படைகளும் காலாட்படைகளும் அணிவகுத்து நின்றன. மலாய் நாட்டிலிருந்து வந்த நூற்றைம்பது படைவீரர் தனித் தொகுதியாக நின்றனர். கோட்டை தகர்ந்தவுடன் அனைவரும் உள்ளே பாயவேண்டும் என்று திட்டமிடப் பட்டிருந்தது. காலை ஆறுமணிக்குப் பீரங்கிகள் முழங்கத் தொடங்கின.

## பாஞ்சையர் ஆயுதபாணிகளாதல்

கும்பினியாரின் ஆயத்தங்களைக் கண்ட பாஞ்சையரும் ஆயுதபாணிகளாகத் திரண்டனர். கோட்டைக்குள் எங்கணும் நிலவறைகளையும் சுரங்க வழிகளையும் அமைத்தனர். அன்று கோட்டைக்குள்ளிருந்தவர்

நாலாயிரத்திருநூறு போர்வீரர். நான்கு மாதங்களாக ஆயிரத்து மூந்நூறு பேர் இறந்தனர்; பலர் அங்க வீனராகி ஒதுங்கியிருந்தனர்; அவர்களிலும் சிலர் அன்று படையில் சேர்ந்துகொண்டனர்.

## பாஞ்சையர் போராட்டம்

பீரங்கிகள் இடைவிடாது குண்டுமாரி பொழிந்த வண்ணமாக இருந்தன. கோட்டை தரைமட்டமாக்கப் பட்ட பின்பே படைவீரர் உட்புகவேண்டும் என்று கும்பினித்தளபதி திட்டம் செய்திருந்தமையால், காலாட்படைகள் போர்புரியவில்லை. அதனையுணர்ந்த பாஞ்சையர், மதில்களுக்கு அருகில் நான்கு மூலைகளிலும் பெரிய குழிகளைத் தோண்டி வைத்தனர். பீரங்கிகளால் தமக்கு அழிவு நேராதவாறு மதிலோரங்களில் வேல் களைத் தாங்கிய வீரர் மறைந்திருந்தனர். நண்பகல் வரையில் மதில் சேதமடையவில்லை. அதன் பின்பு, தெற்குத்திக்கில் மதில் உடைபட்டு வீழ்ந்தது; உடனே பகைவர் திரண்டு உள்ளே வந்தனர். குழிகளில் பதுங்கி நின்ற பாஞ்சைவீரர், பகைவர் அருகில் வந்ததும், அவர் களைக் கூரிய வேல்களால் குத்தி வீழ்த்தினர்; இரண்டு வெள்ளைத்தளபதிகள் தரையில் சாய்ந்தனர். எதிர் பாராத வகையில் அழிவு நேர்ந்ததைக் கண்ட படைத் தலைவர், படைவீரரைப் பின்வாங்குமாறு கட்டளையிட் டார். கோட்டை உடைந்த பின்பும் உள்ளே சென் றவர் விழுந்திறந்தது மாயமாயிருந்தது. நொடிப்பொழு தில் முப்பத்திரண்டு வீரரை இழந்ததால் போரைச் சற்றே நிறுத்திவிட்டு, வெள்ளையர் படைத்தலைவர் பாசறையை அடைந்தார். அங்கே மெக்காலேயுடனும்

எட்டப்பருடனும் கர்னல் ஆக்னியூ ஆலோசனைகளை நடத்தினர்; உயிரை வெறுத்துப் போராடிய பாஞ்சையரின் ஆற்றலை வியந்து போற்றினர். மீண்டும் படுகளத்தையடைந்து, உறுதியுடன் போர்புரியுமாறு படைவீரருக்குக் கட்டளையிட்டார்.

## ஒரு பாஞ்சைவீரனுடைய அரிய செயல்

மீண்டும் கும்பினிப் படைகள் திரண்டன. கடும் வேகத்துடன் பீரங்கி வெடிகள் மதிலைத் தகர்க்கத் தொடங்கின. மேற்கிலும் வடக்கிலும் மதில் உடைந்து விழுந்தது. கும்பினிப்படைகள் முன் நோக்கி வந்தன. கொடிய போர் நடந்ததில் இருதிறத்தவரிலும் பலர் இறந்தனர். அந்நிலையில் வாட்போர் புரிந்து வந்த ஒரு பாஞ்சைவீரனது இடையில் ஒரு குண்டு பாய்ந்தது; அதன் விளைவாக அவன் வாளுடன் தரையில் விழுந்தான். அவனது உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கையில், அவ்வழியே புரவியேறி வந்த ஒரு ஆங்கில வீரன், தனக்கு அந்த வாளைக் கொடுக்குமாறு அவனைக் கேட்டான். உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த பாஞ்சைவீரன், "குனிந்து வாங்கிக்கொள்" என்றான்! வெள்ளை வீரன் குனிந்து கையை நீட்டினன். உடனே பாஞ்சைவீரன் வாளை அவனிடம் கொடுப்பவனைப்போல் பாவனை செய்து, அவ் வெள்ளையனுடைய தலையைச் சீவிவிட்டான்! அவன் சிரம் கீழே விழுமுன்னரே, பரியையும் குத்தி வீழ்த்தினன்; வாளைத் தரையில் செருகி மறைத்தான்; அவனது உயிரும் நீங்கிற்று! இத்தகைய வீரரே பாஞ்சையதிபருக்குத் துணைவராக இருந்தனர். கடும் போரினால் இருதரப்பிலும் கொடிய கொலைகள் நேர்ந்

தன. மாலையில், கும்பினிப் படைகள் கருதிய கருமத்தை முடிக்காமலேயே பாசறையை அடைந்தன.

## கோட்டைப் பாதுகாப்புகளை வலுப்படுத்தல்

பகலில் உடைக்கப்பட்ட மதிலை இரவில் செப்பனிடுவது பாஞ்சை வீரரது வழக்கம். அவ்வாறு செய்யாதபடி இரவு முழுதும் பீரங்கிகள் குண்டுகளைப் பொழிந்து கொண்டே இருந்தன. அந்த நிலையிலும் பாஞ்சை வீரர் மனந்தவராமல் பாதுகாப்புகளை வலுப்படுத்திக் கொண்டேயிருந்தனர். மதில் தகர்ந்ததால், பகைவர் உட்புகாதபடி நீண்ட முட்களைக் கோட்டைக்கு மேற்கே பரப்பி வைத்தனர். அவற்றிற்கு இடையில் பெரிய குழிகள் தோண்டப்பட்டன. பகைவர் வேலிகளைத் தாண்டி வரும்பொழுது, குழிகளில் பதுங்கியிருந்து வேல்களால் குத்தி வீழ்த்துவதற்கு ஆயத்தமாக இருந்தனர். விழித்த கண் மூடாமல் விடியுமட்டும் இந்த வேலை நடந்து வந்தது! இதற்கு முன்னதாகவே அந்தப்புர மகளிரும் பொது மக்களும் கோட்டையிலிருந்து அயலிடங்களுக்கு அனுப்பப்பட்டனர். அன்று நகரில் மூவாயிரத்து அறுநூறு போர் வீரரே இருந்தனர்.

## உறவினரின் கூற்றும் ஊமைத்துரையின் உறுதியும்

இந்த நிலையில் நெருங்கிய உறவினர் சிலர் ஊமைத்துரையினிடம் சென்று, 'அமைதியை நாடாவிடில் அழிவு திண்ணம்' என மொழிந்தனர். ஆனால் அதிபர் இணங்கவில்லை. "அடிமையாக வாழ்வதைவிட, அழிந்து போவதே மேலாகும்" என்று உறுதியுடன் கூறி விட்டார்!

## 10. 'சாமியைக் காப்பாற்று'

### எட்டப்பர் செய்த சதிச்செயல்

1801-ம் ஆண்டு மே மாதம் 24-ம் தேதி காலையில் கடும் போர் தொடங்கிற்று. அதற்கு முதல் நாளே கோட்டையின் மதிற்சுவர் அழிந்து போயிற்று. பகைவரின் பீரங்கிகள் பாஞ்சை நகரின் மாடமாளிகைகளைத் தவிடுபொடியாக்கின. மன்னர் மாளிகைகள் அனைத்தும் தகர்க்கப்பட்டன. வேலியைக் கடந்து உட்செல்ல முயன்ற காலாட்படைகளைக் குழிகளில் பதுங்கியிருந்த பாஞ்சையர் வேல்கொண்டு தாக்கினர். இருமருங்கிலும் பலர் இறந்துபட்டனர். மறைந்து நின்று மூர்க்கமாகத் தாக்கிப் படுநாசம் விளைவித்த பாஞ்சையரின் ஆற்றலைக் கண்டு கும்பினித் தளபதி வியப்புற்றார்; 'இதைத் தடுப்பது எப்படி?' என்று எட்டப்பருடன் கலந்து பேசினார். "பகைவர் மறைவிடங்களில் பதுங்கியுள்ளனர். நம் படைவீரர் ஆய்ந்தோய்ந்து பாராமல் உள்ளே சென்றால், உயிருடன் மீளார். 'நுண்ணிய கருமமும் எண்ணித்துணி' என்றவாறு, பகைவரை வெளியேற்றியே போர் புரிய வேண்டும். உட்புறம் நச்சுப் புகையைச் செலுத்தினால், பகைவரில் பலர் இறப்பது உறுதி" என்று அந்நியருக்குத் தம் நாட்டவரைக் காட்டிக் கொடுக்கும் இயல்பினரான எட்டப்பர் கூறினார். அவர் கருத்துக்கிசைய, வெள்ளையர் செயலாற்ற முனைந்தனர்.

### நச்சுப்புகையால் நேர்ந்த விளைவு

கோட்டையின் நாற்புறத்திலும் குழிகளைத் தோண்டி அவற்றில் மிளகு வற்றல்களைக் குவித்தனர்.

சுரைக்குடுக்கைகளில் பொடி செய்த வற்றல்களுடன் சில மயக்க மருந்துகளையும் கலந்து, வெவ்வேறிடங்களில் வைத்தனர். இவை பாஞ்சையர் அறியாதவாறு நடைபெற்றன. இரவில் வற்றல்களுக்குத் தீ வைக்கப் பட்டது ; சுரைக்குடுக்கைகளுக்கும் தீ வைத்து உள்ளே எறிந்தனர். ஊருக்குள் புகை சூழ்ந்தது ; அது நச்சுப் புகை யாதலால் பலர் மயக்க முற்றனர் ; சிலர் மாண்டனர். இவை போதாமல், வெடி மருந்துடன் மயக்க மருந்து கலந்த கலவையில் தோய்ந்த பீரங்கிக் குண்டுகளைப் பாஞ்சையர் மீது ஏவினர்கள். வெளியே எவரும் போகாதவாறு, படைகளை நிறுத்திக் காவல் செய்தனர். புகை அடர்ந்து படரவே, நிலவறைகளிலிருந்த பாஞ்சை வீரர், மேலும் அங்கே இருக்க முடியாமல் வெளியேறினர். வெளியே தலை நீட்டியவர்களைக் கும்பினிப்படைகள் கடுமையாகச் சுட்டன. நச்சுப்புகையால் மதிமயங்கி நின்ற பாஞ்சையர் குண்டுகளுக்கு இரையாகிக் கீழே விழுந்தனர் !

## பாஞ்சை வீரர் வெளியேறுதல்

ஆயினும், பாஞ்சை வீரர் உறுதியாகப் போராடிக் கொண்டே வெளியேறிச் சென்றனர். உட்புறம் அறுநூறு பாஞ்சைவீரர் குண்டுகளுக்கு இரையாயினர் ; ஆயிரவர் வெளியேறியதும் மாண்டனர் ; எஞ்சியவர் தப்பிச் சென்றனர். அவர்களைப் பின்தொடர்ந்து செல்லுமாறு குதிரைப்படைகளையும் காலாட்படைகளையும் பகைவர் ஏவினர். போராடிக்கொண்டே பலர் வெளியே ஓடி மறைந்தனர். எங்கும் இருள் சூழ்ந்திருந்தமையால், கும்பினிப்படைகள் பாஞ்சைக்குத் திரும்பி

வந்தன. அன்றைய போரில் மாண்டவர் கணக்கி லடங்கார்; எங்கும் பிணக்குவியல், புகை நாற்றம்.

**பாஞ்சை மகளிர் வீரம்**

மாற்றார் நகருக்குள் புகுந்தனர் என்றறிந்த அரச மகளிர் தற்கொலை செய்துகொண்டனர். ஒரு வீரமங்கை, வீதியில் ஒரு வெள்ளையன் செல்வதைக்கண்டு, குறி பார்த்து அவன்மீது ஒரு வேலை எறிந்தாள்! அவன் நொடிப்பொழுதில் விழுந்திறந்தான்! அந்த மங்கையும் ஈட்டியால் தன்னைத் தானே குத்திக்கொண்டு மடிந் தாள்! பாஞ்சையில் பெண்களின் வீரமும் போற்றுதற் குரியதே என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு சான்றாகும்.

**வெள்ளையர் பாஞ்சையரைப் பாராட்டுதல்**

வெற்றி கொண்ட வெள்ளையர் படைத்தலைவர்கள், ஊருக்குள் சென்று நிலவறைகளையும் மற்ற பாதுகாப்பு களையும் நேரே பார்த்தனர். கோட்டையின் வலிமை யும், பாஞ்சையரின் தாக்குந்திறனையும், அவர்களது படைக்கலத் தேர்ச்சியையும் எண்ணியெண்ணி வியந்து நின்றனர்! அத்தகைய நிலவறைகளை ஆங்கிலச் சிற்பி களாலும் அந்த மண்ணில் அமைக்க முடியாது என்று ஒப்புக்கொண்டு, பாஞ்சைவீரரின் ஆற்றலை மனமாரப் பாராட்டினர்!

**விதிசெய்த சதி!**

ஆயினும், பாஞ்சைவீரரின் தோல்வி நமக்குத் திகைப்பையூட்டுகிறது. நேர்மையான வழியில் அவர்

களை வெள்ளையர் வெற்றி கொள்ளவில்லை. வஞ்சனையாலும் நச்சுப்புகையின் உதவியாலும் அவர்கள் தேல்வியடைந்தனர். நாட்டுப்பற்றுக்குக் கட்ட பொம்மனுர் அடைந்த பரிசு தூக்குமேடை! பாஞ்சை வீரர் பெற்ற பரிசு நச்சுப்புகை! நச்சுப்புகையைச் செலுத்த யோசனை கூறியவன் நம் நாட்டவனே! இதை ‘ விதி செய்த சதி ’ என்றுதான் கூறவேண்டும்.

**ஊமைத்துரை தப்பிச் செல்லுதல்**

இது நிற்க, பாஞ்சைவீரரில் பலர் இறந்துபட்டன ரேனும், தம்பி துரைச்சிங்கத்துடனும், எஞ்சிய படை வீரருடனும் கோட்டையின் கிழக்கு வாயில் வழியாக ஊமைத்துரை வெளியெறினுர்! கோட்டையைச் சுற்றி லும் கும்பினிப்படைகள் காவல் செய்து வந்தபோதி லும், அக்காவலை மீறி, அவர் தமது துணைவருடன் வெளியே சென்றது வியப்புக்குரியதாகும். “ அவர் மாயமாக மறைந்துவிட்டார் ” என்று வெள்ளையரும் கூறியுள்ளனர். அவரைப் பின்தொடர்ந்து, எட்டைய புரத்துப் படையும் கும்பினிப் படையும் சென்றன. கோட்டைக்கு மூன்று மைலில் இருந்த ஒரு சிற்றூரில் இருபடைகளுக்கும் ஒரு பெரும் போர் நிகழ்ந்தது: இருமருங்கிலும் பலர் இறந்தனர். இருள் சூழ்ந்திருந் தமையால், கும்பினிப்படைகள் மீண்டு சென்றன. எங்கும் உயிரற்ற உடல்கள் குவியல் குவியலாகக் கிடந்தன.

**ஊமைத்துரைக்கு நேர்ந்த விபத்து**

இப்போரில் ஊமைத்துரை வீராவேசத்துடன் கலந்து கொண்டார். இறுதியில், உடல் முழுதும் படு

காயங்கள் அடைந்து, உணர்விழந்து, தரையில் பிணக் குவியல்களிடையே விழுந்தார். பாஞ்சைப் படைவீரரி டையில், தமிழ் வீரர் தமிழன்னையின் அணைப்பில் மயங்கிக் கிடந்தார் !

## பாஞ்சைப் பெண்மக்கள் படுகளத்தை அடைதல்

அந்த வேளையில், சில பெண்கள் அந்தப் படுகளத்தினுள்ளே புகுந்தனர். கோட்டையி லிருந்து வெளியேறிய போர்வீரரில் பலர், அதனைச் சுற்றியிருந்த கிராமங்களில் வாழ்ந்து வந்தவரேயாவர். அவர்களுடைய பெண்கள் தம் ஆடவரின் கதியைக் காணவேண்டுமென்று படுகளத்தை நாடி விரைந்து வந்தனர். கணவன் கதி யாதாயிற்றோ, மகன் மாண் டானோ என்ற கவலைகள் மேலிட்டுப் படுகளத்தை யடைந்தனர். அங்குக்காணப்பட்ட கோரக்காட்சியைக் கண்டு துணுக்குற்றனர். ஒரு புறத்தில் குற்றுயிராய்க் கிடப்போர் ; மறுபுறம் பிணக்குவியல்; ஒரு பக்கம் உதிர வெள்ளம் ; பின்னுமொரு பக்கம் சரிந்த குடல், அறுந்த சிரம், எரிந்த உடல்; எங்கணும் சிதறிக் கிடந்த போர்க் கருவிகள், இந்தக் கோரக்காட்சியைக் கண்டும் அந்தப் பெண்மணிகள் நடுங்கவில்லை.

## பெண்கள் புரிந்த உதவி

பிணமாகக் கிடந்தவரின் மார்பகத்தை அவர்கள் கண்டனர் ; கண்டு களிப்பு மிகுந்தனர் ; ஏனெனில், அங்கே படுகாயங்கள் பல இருந்தன. முதுகில் காயம் ஏற்படுவது வீரருக்கு அழகல்லவே! வீரரின் அன்னையரும்

காதலிகளும் தத்தம் ஆருயிரைக் காணவேண்டி, பிணக் குவியல்களிடையே தேடிப் பார்த்தனர். தமிழன்னையே பல உருவங்களில் வந்து, தன் அருமைப் புதல்வரின் வீரவாழ்வைப் போற்றுவது போலிருந்தது அக்காட்சி. அந்நங்கையர் கண்களினின்றும் கண்ணீர் பெருக் கெடுத்து ஓடிற்று. வீரப்புதல்வரைக் கண்டு களித்த இன்பக்கண்ணீர் என்றும் அதைக் கருதலாம். உயிரிழந் தோரை எடுத்துச்சென்று ஈமக்கடன்களைப் புரியவும், படுகாயமுற்றோருக்குத் தக்க சிகிச்சை செய்யவும் அப் பெண்மணிகள் ஆவல்கொண்டனர். இறந்த வீரர்களைப் பலர் வெளியில் எடுத்துச் சென்றனர்; மயங்கி விழுந் தவருக்கு மருத்துவம் செய்தனர் மற்றும் பலர்.

## ஒரு மூதாட்டி தன் மைந்தனைக் காணுதல்

அங்கே சென்ற பெண்களில் ஒரு தாய் உயிருக்கு மன்றாடிக்கொண்டிருக்கும் ஒரு வீரனைக் கண்டாள். அப் பெண்மணி முதியவள். அவள் அவ்வீரனை அருகிற்சென்று பார்த்தாள்; அவனே தன் ஆருயிரனைய மகன் என்று கண்டாள். “அப்பா, மகனே!” என்று அவனை வாரியெடுத்து, மார்புடன் அணைத்துக் கொண் டாள். பெற்றெடுத்த வயிறு பற்றி எரிந்தது! சவம் போல் கிடந்த அந்த வீரன் உணர்வுடன் இருந்தான்; ஆயினும், அவனால் கை கால்களை அசைக்கமுடியவில்லை; அவன் முகத்தில் புன்னகை தவழ்ந்தது; கண்கள் மூடி யிருந்தன. முதியவளின் அழுகுரலைக் கேட்ட மற்ற மாதர் ஓடிவந்து, ஆறுதல் மொழிகளைக் கூறினார்கள். அப்பொழுது, அந்த வீரன் சற்றே கண் விழித்தான்; சுற்றுமுற்றும் பார்த்தான்; மீண்டும் அவன் இமைகள்

மூடிக்கொண்டன. "மைந்தன் இறக்கவில்லை. மருத்துவம் செய்தால் பிழைப்பான். தேவியின் அருள்" என்றனர் அம்மாதர்.

### வீரமகன் அன்னையிடம் வேண்டியது

அந்நிலையில் அந்த வீரமகன் தன் அன்னையை அன்புடன் நோக்கினான். அவன் உள்ளத்தில் சிந்தனை ஒளி வீசிற்று. 'நான் பிழைத்தால் அன்னையும் உறவினரும் களிப்பெய்துவர்; **தலைவன்** பிழைத்தால் நாடு நலம் பெறும்' என்று எண்ணமிட்டான். அன்னையை நோக்கி, "அம்மா! என்னையன்றி உனக்கு வேறு திக்கில்லை என்பதை நான் அறிவேன். என் தந்தையைப் பின்பற்றி நானும் படுகளம் புகுந்தேன்; பகைவரில் பலரைக் கொன்றேன்; படுகாயங்களால் பாரின்மேல் சாய்ந்தேன். என் உயிர்மீது எனக்குப் பற்று இல்லை, பாஞ்சாலங்குறிச்சியைப் பகைவரிடமிருந்து மீட்பதே எனது நோக்கமாயிருந்தது. ஆனால், அதற்குள் நான் இறந்துவிடுவேன். தமிழன்னையைக் கும்பினியாரிடமிருந்து காப்பாற்ற வல்லவர் அதோ படுகாயமடைந்து பார்மீது கிடக்கிறார்; அவரைக் காப்பாற்று. என்னைப் பற்றிக் கவலை கொள்ளாதே; நாட்டின் நலத்தைக் கவனி. அம்மா! அங்கே கிடக்கும் நம் **சாமியைக்** காப்பாற்று," என்று திணறிக்கொண்டே அந்த வீரன் கூறிமுடித்தான். உடனே அவன் உயிர் உடலைவிட்டுப் பிரிந்தது!

### ஊமைத்துரை சிகிச்சை பெறுதல்

தாயார் அழுதாள்; புரண்டாள். ஆனால் மாண்டவர் மீள்வரோ? விரைவில் தெளிவடைந்து, ஊமைத்

துரையின் உடலை அப்பிணக்குவியலில் கண்டெடுத்தாள். இரத்த வெள்ளத்தில் அவர் குற்றுயிராகக் கிடப்பதைக் கண்டாள். மற்ற மங்கையர் துணைசெய்ய, அவரைத் தூக்கிக் கொண்டு வீட்டிற்குத் சென்று மஞ்சத்தின்மீது கிடத்தி, அவருடைய காயங்களைக் கழுவிப் பல பச்சிலைகளையும் மருந்துகளையும் வைத்துக் கட்டினாள்; உபசாரங்கள் பல புரிந்து மருத்துவம் செய்தாள். இந்த நிகழ்ச்சி மாற்றார் அறியாவண்ணம் மறைவாகவே நடந்தது.

## கும்பினிப்படைவீரர் மன்னவரைத் தேடிச் செல்லுதல்

இதிலிருந்து, சாமியின்பால் மக்கள் வைத்திருந்த பேரன்பு நமக்கு ஒருவாறு புலனாகின்றது. தன்னலம் சிறிதுமின்றி, இறுதிக் காலத்திலும் தன் மன்னவரது உயிரைக் காப்பாற்ற விழைந்த அம்மூதாட்டியின் மனப் பண்புக்கு இணை ஏது? குடிமக்கள் அனைவரும் ஊமைத் துரையைத் தெய்வமெனப் பேணி வந்தனர் என்பதற்கு இது ஒரு சான்றாகும். அக்கோமகன் எளிய விடுதியில் உயிருக்கு மன்றாடிக்கொண்டிருக்க, வெள்ளையர் பாஞ்சையில் களிவெறி கொண்டு திரிந்தனர்; ஆயினும் அவர்கள் உள்ளத்தில் அவமானம் கொழுந்துவிட்டு எரிந்தது. ‘வெள்ளையரை எள்ளி நகையாடிய ஊமையன் தப்பிச் சென்றானே’ என்று ஏக்கம் கொண்டான் சேனைத் தலைவன். உடனே படைத்தலைவரை அழைத்து, “ஊமைத்துரை எங்கிருந்தாலும் பிடித்து வரவேண்டும்” என்று கட்டளையிட்டான். அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு எட்டையபுரத்து வீரர் எக்களிப்புடன் புறப்பட்டனர். நடுவழியில் போர் நடந்த படுகளத்தைக் கண்டு, அங்கே

தேடிப்பார்க்க, பிணங்களே இருக்கக் கண்டு, அதை விட்டு நீங்கி, அங்கு காணப்பட்ட அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் சென்று, ஒரு மைல் தூரத்திலிருந்த **கக்கரம் பட்டி** என்னுமூரை அடைந்தனர்.

## முத்தம்மாளின் சூழ்ச்சி

கக்கரம்பட்டி என்னுமூரில், **முத்தம்மாள்** என்னும் மூதாட்டியின் வீட்டில்தான் ஊமைத்துரை மறைவாக மருத்துவம் பெற்று வந்தார். எட்டப்பரின் படைவீரர் அவ்வூருக்குள் புகுந்ததை அறிந்து அம்மாது, உள்ளம் கலங்கினாள். "கொடிய பகைவர் வந்து விட்டனரே! சாமிக்கு யாது நேருமோ?'' என்று திகிலடைந்தாள். உடனே அவள் தீவிரமாகச் சிந்தனை செய்யத் தொடங்கினாள். 'அபாயம் வந்துற்றபொழுது உபாயத்தைக் கைக்கொள்ள வேண்டும்' என்று முடிவு செய்தாள். அந்த உபாயம் அரியதொரு சூழ்ச்சியாக அமைந்தது.

அக் குலமகள் உடனே பசு மஞ்சளைப் பெருமளவில் அரைத்து, ஊமைத்துரையின் உடல் முழுவதும் பூசினாள். ஒரு வெள்ளைத் துகிலால் அவரது உடலை நன்கு மூடினாள். சில வேப்பிலைக் கொத்துக்களைத் தலைவாயிலில் செருகி வைத்தாள்; மஞ்சத்திலும் சில கொத்துக்களைப் பொதிந்து வைத்தாள். அயலிலிருந்த சில பெண்களைச் சேர்த்துக் கொண்டு மஞ்சத்தைச் சுற்றி உட்கார்ந்து, கண்ணீர் வடிய ஒப்பாரி வைத்து விம்மி விம்மி அழுதாள்.


## எட்டையபுரத்தார் ஓட்டம் பிடித்தல்

எட்டையபுரத்துப் படைவீரர், தப்பியோடிச் சென்ற மன்னரைத் தேடிக்கொண்டு இந்த வீட்டை

யடைந்தனர்; உள்ளிருந்து வந்த ஓலத்தைக் கேட்டு, "என்ன அழுகை?" என்று வினவினர். வெளியே யிருந்த சில பெண்கள், " இந்த வீட்டு அம்மாளுக்கு ஒரே ஒரு மகனிருந்தான். ஒரு திங்களாக அவன் வைசூரியால் வருந்தி இன்று இறந்து போனான்" என்று விடை பகர்ந்தனர். ' வைசூரி ' என்ற சொல்லைக்கேட்ட அவ்வீரமணிகள் ஊரைவிட்டு ஓட்டம் பிடித்தனர்! ஊமைத்துரையும் உயிர் பிழைத்து எழுந்தார்; அவ் வூராரும் அரசர் பிழைத்தார் என்று ஆனந்தமடைந்த னர். அந்த வீரத்தாயின் தீரத்தை உன்னுந்தோறும் நமக்குப் பெருமிதம் தோன்றும் அல்லவா! இத்தகைய தாய்மாரைப் படைத்த தமிழன்னை செய்துள்ள தவமே தவம் என்று போற்றுவோமாக!

### வெள்ளையர் இறுமாந்திருத்தல்

பாஞ்சையைக் கைப்பற்றிய சேனைத்தலைவன், அந்த அழகிய நகரைத் தரைமட்டமாக்கினான்; திரு நிறைந்திருந்த நகரம் மே மாதம் 25-ம் தேதியன்று உருமாறி ஒழிந்து போனது. எட்டப்பர் கும்பினியா ரிடம் பல பரிசுகளை பெற்றார். வெள்ளையரும் வெற்றி பெற்றோம் என்று இறுமாந்து நின்றனர்.



# 11. மருது சகோதரர்

## ஊமைத்துரை மறைவிடம் விட்டு வெளியேறுதல்

முத்தம்மாள் செய்த அற்புதச் சூழ்ச்சியின் பயனுக ஊமைத்துரை உயிர்பிழைத்தார். உடலிலிருந்த படு காயங்கள் யாவும் சின்னுட்களில் ஆறிவிட்டன. அம் மூதாட்டியின் பரிவு மிகுந்த பணிவிடையினுல் நாளடைவில் உடல் உரம்பெற்று வந்தார். அத்தாயின் பேரன்பைக் கண்டு வியந்தார். 'இவருக்கு என்ன கைம்மாறு செய்வேன்' என்று கண்ணீருகுத்து உள்ளம் உருகினர். பெற்ற அன்னையைக் காட்டிலும் பரிவுடன் தன்னைப் பேணி வந்த அவ்வம்மையின் பேருபகாரத்தைப் போற்றினர். தான் பெற்று வளர்த்த மகனைப் படுகளத்திலேயே இறக்குமாறு விட்டுவிட்டு, அந்தத் துயரத்தைப் பொறுத்துக்கொண்டு, தன்னை எடுத்து வந்து கொலைக் காரரிடமிருந்து காப்பாற்றி ஆதரவளித்த அந்த அன்னையை நோக்கி, "அம்மா! நீரே என்னை ஈன்ற தாய். நான் பிழைத்து மீண்டும் இங்கே வந்தால், உமக்கு மகனுக இருந்து வேண்டிய பணிகளைச் செய்வேன். ஈன்ற மகனைக் குழியில் தள்ளிவிட்டு, என்னை அணைத்தெடுத்துவந்த அன்னையே! எனக்கு விடை கொடுங்கள். என் கடமையைச் செய்ய நான் விரைந்து செல்லவேண்டும். என் அருமைத் துரைச்சிங்கத்தை நான் காண வேண்டும்" என்று கூறி, கரங்களைக் குவித்து வேண்டிக்கொண்டார். அம்மூதாட்டியும் கண்ணீர்மல்கப் பிரியாவிடை அளித்தாள். அன்றிரவே ஊமைத்துரை

அவ்வூரை விடுத்து வடதிசை நோக்கி வெளியேறினர். அன்று சூன் மாதம் பதினாறும் நாளாகும்.

### வேறு மறைவிடம் தேட முனைதல்

நள்ளிரவில், துணைவரின்றி அநாதைபோல் நடந்து சென்ற மன்னவர், அதிகாலையில் ஒரூரை யடைந்தார். அங்கே ஒரு வேளாளருடைய ஆதரவில் வாழ்ந்து வந்தார். அந்த வேளாளர், பாஞ்சைப்போரில் தப்பிச் சென்ற தம்பி துரைச்சிங்கத்தை, அவர் மறைந்திருந்த ஊரிலிருந்து அழைத்து வந்து முன்னவரிடம் சேர்த்தார். அருமைத் தம்பியைக் கண்ட அண்ணல், அவரை அணைத்து மகிழ்ந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். இருவரும் தமது குடும்பத்தினரின் நிலையை நினைந்து கண்ணீருகுத்தனர்; மேலே நடக்கவேண்டியவற்றை ஆராய்ந்து, வேற்றிடம் செல்லுதலே நலம் என்று முடிவு செய்தனர்.

### ஊமைத்துரை கமுதிக் கோட்டையில் குடியேறுதல்

பாஞ்சையதிபர், தம்மை அன்புடன் காத்துவந்த வேளாளரிடம் விடைபெற்று, தம்பியும் உறவினரும் உடன்வர, இரவோடிரவாக வெளியேறினர். இடைவழியில் பல இடங்களில் தங்கித் தங்கி இறுதியாகக் **கமுதி**யை அடைந்து, அங்கிருந்த கோட்டையை உறைவிடமாக அமைத்துக் கொண்டார். இராமநாதபுரத்தைச் சேர்ந்த கமுதிக்கோட்டை ஒரு சிறந்த அரணாக அமைந்திருந்தது.

## கோமகன் மீண்டும் படைதிரட்டுதல்

பாஞ்சையதிபர் அங்கு வீற்றிருந்ததை யறிந்த அந் நாட்டு மறவர் அவரை உவந்து உபசரித்தனர். பாஞ் சைப்போர் முடிவில் எஞ்சியோடிய வீரரில் பலர் அவரை நாடிவந்து ஒருங்கே திரண்டனர். அவர்களனை வரும் வெள்ளையராட்சியிலிருந்த பாளையங்களிலிருந்து ஒரு பெரும்படையைத் திரட்டினர்; அனைவரும் போர்க்கோலம் பூண்டு, மன்னவரை வணங்கி நின்ற னர். போர்க்கருவிகள் பல ஆயத்தம் செய்யப்பட்டன. படைவீரருக்கு வேண்டிய வசதிகளனைத்தும் செய்து கொடுக்கப்பட்டன. ஒரு மாத காலத்திற்குள் ஏறக் குறைய இருபதினாயிரம் போர்வீரர் அவரது கொடியின் கீழ் திரண்டு, உறுதியும் ஊக்கமும் கொண்டு நின்றனர்.

## சிவகங்கை மருது சகோதரர்

அந்நாளில் சிவகங்கையை **வெள்ளைமருது சேர்வை** என்பவர் ஆண்டு வந்தார். அவர் உல்லாசப் பிரியர்; வேட்டையாடுவதில் விருப்பம் மிகுந்தவர். ஆதலால், அரசியல் வேலைகளில் அவர் ஆர்வம் செலுத்தவில்லை. அவருக்கு இளையவரான **சின்ன மருது** என்பவர் நாட் டின் ஆட்சிப்பொறுப்பை ஏற்று நடத்திவந்தார். வெள்ளை மருது, **பெரிய மருது** என்று அழைக்கப்பட்டு வந்தார். பெரிய மருது, அரசாட்சியில் தலையிடாமல் உல்லாச வாழ்க்கையிலேயே ஈடுபட்டிருந்தார். சின்ன மருது சிறந்த போர்வீரர்; அஞ்சாநெஞ்சம் படைத் தவர்; துட்டரை ஒடுக்கிச் சிட்டருக்கு இதம் புரிந்து வந்தமையால், குடிமக்கள் அவரிடம் பேரன்பு கொண்

டிருந்தனர். சின்ன மருது ஆட்சியில் குடிகள் கவலையற்று வாழ்ந்து வந்தனர். அவர் பல தானதருமங்களைச் செய்துள்ளார்; பல கோயில்களை அமைத்துள்ளார். அவர் பொலிவும் பெருமிதமும் அமைந்த தோற்றமுள்ளவர்; இனிமையும், அன்பும், ஆதரவும் அவரிடம் பெருமளவில் காணப்பட்டன. அவருடைய நாவசைந்தால் நாடசையும். ஆயினும் அவர் எளிய வாழ்க்கையே நடத்தி வந்தார்; செல்வச்செருக்கும் ஆடம்பரமும் இன்றி, குடிபடைகளை நன்கு பாதுகாத்து வந்தார். அவர் கற்றோரைப் போற்றிவந்த கண்ணியர்; புலவரை ஆதரித்த புரவலர்; வறியவர்க்கு வழங்கிய வள்ளல்.

## பாஞ்சையதிபர் சிறுவயலை அடைதல்

இவ்வகைப் பண்புகள் நிரம்பிய சின்ன மருது, பாஞ்சையதிபர் கமுதியிலிருந்ததை அறிந்து, அவரைக் காண விரைந்தார். அங்கே அவரைக் கண்டு உள்ளம் உருகி நின்றார்; தமது இருப்பிடமாகிய சிறுவயலுக்கு அழைத்துச் சென்று, உபசாரங்கள் பல புரிந்தார். இருவரும் நட்புரிமை பூண்டு, மேலே ஆற்றவேண்டிய செயல்களைத் திட்டம் செய்து கொண்டனர்.

## சின்ன மருதுவின் கருத்து

மருது சகோதரருக்குக் கும்பினியாரிடம் மனத்தாங்கல் இருந்தது. பெரிய மருது சேர்வைக்கு அவர் மனைவி வேலுநாச்சியாரிடமிருந்து ஜமீன் உரிமை கிடைத்தது. அது செல்லத்தக்கதல்ல என்றும், அதற்குரிய வேறு ஆதாரங்களை அனுப்புமாறும் கும்பினியார் கட்டளை யனுப்பியிருந்தனர். அதனால் மருது சகோதரர் கும்பினி

யார்மீது சினம் மிகுந்திருந்தனர். அந்தநிலையில் ஊமைத்துரையுடன் சேர்ந்து போரிட்டால், தமக்கும் நாட்டுக்கும் நலமுண்டாகும் எனக் கருதிய சின்னமருது, அவருக்குத் துணைசெய்ய முனைந்தார். ஊமைத்துரைக்கும் அவருடைய துணை வேண்டியிருந்தது.

## கும்பினிப் படை சிறுவயலை யடைதல்

ஊமைத்துரை தப்பிச் சென்று, மருது சகோதரருடன் ஒன்றி, படை திரட்டிப் போருக்கு ஆயத்தம் செய்து வருகிறார் என்ற செய்தியைக் கும்பினியார் அறிந்தனர். தப்பிச் சென்ற ஒரு மாதத்திற்குள் பெரும் படையைத் திரட்டி, மீண்டும் போரிட முனைந்து நிற்கும் பாஞ்சை மன்னரின் ஆற்றல் அவர்கட்குத் திகைப்பை விளைவித்தது. அத்திகைப்பு வியப்பாக மாறி, செயலில் கொண்டு சென்றது. கும்பினியார் மீண்டும் படை வீரரைத் திரட்டி, ஆக்னியூவையே சேனாதிபதியாக அமர்த்தி, அடுத்துவரும் நிகழ்ச்சிகளை எதிர்பார்த்திருந்தனர். சூலை மாதம் இருபத்தைந்தாந் தேதி கும்பினிப்படைகள் திரண்டெழுந்து சிறுவயலை நோக்கி நடந்தன.

## குடிமக்களின் நாசவேலை

கும்பினிப்படைகள் சிறுவயலைச் சூழ்ந்து நின்றன. இதனை முன்னமே அறிந்த மன்னரிருவரும், சிறுவயல் அரண்மனைக்குப் போதிய அரண்களில்லாமையால், அதனை விடுத்துப் படைவீரருடன் அருகிலிருந்த காட்டில் மறைந்து கொண்டனர். கும்பினிப்படைகள்

கிராமத்தைச் சூழ்த்து நின்றதை யறிந்த குடிமக்கள், தத்தம் வீடுகளுக்குத் தீ வைத்துவிட்டு, ஊரைவிட்டு வெளியேறிச் சென்றனர். அவர்கள் வைத்த தீ கொழுந்து விட்டெரிந்தது. தீப்பொறிகளைக் கண்ட வெள்ளையர் ஒதுங்கியே நின்றனர் ; தீ அணைந்த பின் உட்புகுந்து அரண்மனையைக் கைப்பற்றிக்கொண்டனர். இச்சம்பவம் இரண்டாவது உலகப்போரில் ருஷ்யர் கடைப்பிடித்த போர்முறையைத் தழுவியிருப்பதை ஈண்டுக் காணலாம். ஜெர்மன்படைகள் முன்னேறி வருவதை யறிந்த ருஷ்ய வீரர், தம்மிடமிருந்த சாதனங்களைப் பகைவர் அடையக்கூடாதென்று கருதி, நாட்டின் உயிர் நிலையங்களை உடைத்தெறிந்தனர். சிறுவயல் குடிகளும் இதே போன்ற போர் முறையைக் கையாண்டது வியப்புக்குரியதல்லவா ?

## கும்பினியார் காட்டை வளைத்துக்கொள்ளுதல்

ஊமைத்துரையும் அவரது துணைவரும் மறைந்து வாழ்ந்த இடம் சின்னாட்கள் வரையில் கும்பினிப் படைத்தலைவருக்குத் தெரியவில்லை : பின்பு அந்த அடர்ந்த காட்டைக் கண்டுபிடித்தார். அது சிறுவயலுக்குத் தென்மேற்கில் பத்து மைல் தொலைவில் இருந்தது. ஆகஸ்டு மாதம் ஆருந்தேதி அந்தக் காட்டைக் கும்பினிப்படைகள் வளைத்துக் கொண்டன.

## ஊமைத்துரையின் ஏமாற்றமும் உறுதியும்

முதலில் இராமநாதபுரத்தைக் கைப்பற்றிப் பின்பு கும்பினியாரை எதிர்க்கவேண்டும் என்று திட்டமிட்

டிருந்த பாஞ்சையதிபருக்கு, அவ்வாறு நடவாமல் தவறிப்போனது ஏமாற்றமாயிருந்தது. அவரது படைகளும் ஆங்காங்கே சிதறியிருந்தன. இதற்கிடையில் கும்பினியார் சிவகங்கையைத் தம் வசப்படுத்திக் கொண்டனர். இச்செய்திகளால் வருத்தமுற்றிருந்த ஊமைத்துரை, உறுதியுடன் எதிர்த்துப் போர் செய்ய முடிவு செய்தார். அவருடன் முந்நூறு படைவீரரே இருந்தனர்.

# 12. இறுதிப் போர்

## வீரம் செறிந்த முடிவு

தன்னலம் கருதாத் தமிழ் மன்னர் ஊமைத்துரையின் வாழ்க்கை வரலாற்றின் இறுதிக்கட்டத்தை அடைந்துவிட்டோம். நாட்டுக்குத் துரோகம் செய்து, அந்நியரிடம் நலம்பெற விழைந்துநின்ற மக்களிடையில், உரிமை வேட்கை மிகுந்து உயிரைத் திரணமாக மதித்து, அயல் நாட்டவரை வெளியேற்ற அருஞ்செயலாற்றிய இவ்வீரமணியின் வாழ்க்கைக்கும் ஒரு முடிவு இருந்தது. ஆனால் அம்முடிவும் வீரம் செறிந்ததாகவே அமைந்தது நமக்கு ஆறுதலை அளிக்கிறது.

## ஊமைத்துரையின் போர்க்கருவி

ஊமைத்துரை சிறந்த போர்வீரர் ; வாட்போரிலும் சிலம்பப் போரிலும் நிகரில்லாதவர். அவரிடம் அற்புதமான ஒரு சுருளும் வாள் இருந்தது ; அதை விரித்தால் இருபத்து நான்கு முழம் நீளும்; இரு மருங்கிலும் கூர்மையானது ; ஒரே சுற்றில் பல சிரங்களைத் துணிக்கும் வன்மை வாய்ந்தது. அந்த வாட்போரில் அவருக்கு இணை அவரே. பாஞ்சைப்போரில் அதனை அவர் பயன்படுத்தவில்லை ; அதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை ; இங்கே அதனைப் பயன்படுத்த முனைந்து நின்றார்.

## கும்பினிப்படை ஓட்டம் எடுத்தது

காட்டில் மறைந்த புரட்சி வீரரைக் காணவேண்டி, கும்பினிப்படைகள் புதர்களை அகற்றி வழிகளை உண்

டாக்கி முன்னேறிச் சென்றன; அங்கே ஊமைத் துரையை வாளுடன் கண்டன. எளிதில் அவரைப் பிடித்துவிடலாம் என்றெண்ணி, புரட்சிவீரரை வளைத்துக்கொண்டு குண்டு மாரி பொழிந்தன. தமிழ் மன்னர், குண்டு வீச்சுக்கு அஞ்சாமல், விரைவாகப் பகைவரிடையே பாய்ந்து, தமது வாளைச் சுழற்றி வீசினர்! ஒரே வீச்சில் எழுவர் சிரங்கள் மண்ணைக் கவ்வின! திருமாலின் சக்கரம்போல் சுழன்று சுழன்று அற்புதமாக வேலை செய்தது அந்த வாள்! அதனைக் கையில்கொண்டு சூறுவளி யெனச் சுற்றி வந்தார் அவ்வீரர்! வாள் பாய்ந்த இடமெல்லாம் சிரங்கள் அறுந்து விழுந்தன! அக்கொலைகளைக் கண்ட பகைவர் படை 'தலைதப்பினது தம்பிரான் புண்ணியம்' என்று காட்டைவிட்டு வெளியேறின! மன்னவரும் மற்றவரும் காட்டுக்குள்ளே மறைந்தனர்.

## ஊமைத்துரை வேற்றிடம் புகுதல்

படைவீரரில் பலர் மாண்டதைக் கண்ட கும்பனித் தளபதி உள்ளம் கொதித்து நின்றான். ஊமைத்துரையின் வீரச்செயலை அருகிலிருந்து பார்த்த மருது சேர்வை அதிசயித்து நின்றார். அன்று வரை ஊமைத்துரையின் போர்த்திறத்தை அவர் நேரில் கண்டதில்லை. அன்று கண்ட காட்சி அவரைத் திகைக்கச் செய்தது. அந்தக் காட்டிலேயே இருந்தால் மீண்டும் இன்னல் விளையும் என்று கருதி, இருவரும் துணைவருடன் இருபது மைல்களுக்கப்பாலிருந்த ஒரு கானகத்தில் மறைந்து வசித்து வந்தனர்.

## சின்னமருதுவின் கொடைத்திறன்

சின்ன மருது பாஞ்சையதிபருக்குத் துணை நின்றது வெள்ளையர் கண்களை உறுத்திற்று. அவருக்கு இன்னல் விளைவிக்கக் கருதி, சிவகங்கை ஜமீனுக்கு முதல்வரான **சசிவர்ணத் தேவருடைய** வழிமுறை என்று தம்மைக் கூறிக்கொண்ட ஒருவருக்கு அந்த ஜமீனை உரிமையாக்கினர்; அவர் கும்பினியாருக்குத் துணையாக நின்று உதவினர். தமது ஜமீனைப் பறித்து வேறொருவருக்கு அளித்ததையறிந்த பெரியமருது பெரிதும் வருந்தினர். ஒரு நாள் சின்னமருது, தமது மறைவிடத்தை விடுத்து **அரசனேந்தல்** என்னுமிடத்திலிருந்த தம் அண்ணனைக் காணச் சென்றார். இளவலைக் கண்ட தமையன், அவரை உள்ளன்புடன் தழுவி மகிழ்ந்தார். சின்ன மருது மீண்டு வந்த வழியில், ஒரு நாள் மாலை, பசி மிகுதியால் களைத்து விழுந்தார். அயலேயிருந்த ஒரு கிழவி, அவரது நிலையைக்கண்டு இரங்கி, சிறிது கூழை அளித்தாள். சின்ன மருது அதை அமுதம்போல் எண்ணி, வாங்கிக் குடித்தார். அக் கிழவியின் பெயர் **தாயம்மாள்** என்பது. சின்னமருது, அருகேருயுந்த ஒரு முள்ளை எடுத்து, ஒரு சிறிய ஓலையில், "இந்தக் கிராமம் தாயம்மாள் என்ற இந்தக் கிழவிக்கு உரித்தானது" என்றெழுதி, "மருது" என்று கீழே கையொப்பமிட்டு, "இதனைச் சிவகங்கை ஜமீன் நிர்வாகியிடம் எடுத்துச் செல்" என்று சொல்லிச் சென்றார். அதுபோலவே, அந்தக் கிராமம் அவளுக்கு வழங்கப்பட்டது. அவரே மருதுபாண்டியன் என்றறிந்த கிழவி, பெரிதும் வியப்புற்றாள்.

## வெள்ளையர் காட்டை வெட்டி வழி அமைத்தல்

இது நிற்க, சிறுவயலிலிருந்து காளையார் கோயில் வரை அந்தக் கானகம் பரவியிருந்தது. அதனூடே கதிரவன் கதிர்களும் செல்ல முடியாதவாறு மரங்கள் அடர்ந்திருந்தன. வெள்ளையர் அந்தக் காட்டை அழித்து, வெட்ட வெளியாக்கினர். அதனையறிந்த ஊமைத்துரை, அக்கானகத்தை விடுத்து, தம் துணைவருடன் அயலேயிருந்த வேறொரு காட்டையடைந்தார்.



# 13. தியாகியின் மறைவு

## ஊமைத்துரை மறைவிடத்தைவிட்டு வெளியேறுதல்

ஊமைத்துரை மறைந்திருந்த இடத்தை அறிந்து கொண்டு, கும்பினியார் பெரும் படையுடன் அந்தக் காட்டை வளைத்துக் கொண்டனர்; வெளியிலிருந்து உணவுப்பொருள்கள் உள்ளே செல்லாதவாறு காவல் காத்து நின்றனர். அந்த நிலையில் பட்டினியால் பரிதவித்துக்கொண்டிருந்த தம்மனேரையும் மருதுவையும் விளித்து, “ எம்மால் உமக்கு அல்லல் பல நேர்ந்துள்ளன. எம்முடன் ஒன்றியிராவிடில் கும்பினியார் உமது உரிமையைப் பறித்திருக்க மாட்டார்கள். இனியும் நாம் இங்கிருந்தால் உமக்கு மேலும் கேடு நேரும். நீர் எமக்குச் செய்த உதவிக்கு எமது நன்றி. கோழைகளாக வாழும் பல தமிழ் மன்னரிடையே, நாட்டுப்பற்றும் உரிமை வேட்கையும் மிகுந்துள்ள உம்மைக் காண்பது எமக்கு உவகை அளிக்கிறது. யாம் அறநெறி வழுவாது அரசினை ஆண்டு வந்தோம். ஊழ்வினையால் நலிந்தோம். நம்மை நம்மவரே காட்டிக்கொடுத்த ஈனச்செயலை அறிந்தோம். நயவஞ்சகமாக நாட்டைப் பறிக்க வெள்ளையர் திட்டமிட்டுள்ளனர். பேடிகள் வாழும் இந் நாட்டில் வாழ்வதை யாம் வேம்பெனவே கருதுகிறோம். யாம் இங்கு தொடர்ந்து இருந்தால், நீங்கள் துயரம் அடைவீர்கள். ஆதலின், எமக்கு விடைகொடுங்கள்” என்று சொல்லிப் பிரியாவிடை பெற்றுப் பிரிந்தார் மன்னவர்.

## சின்னமருது சிறைப்படுதல்

பாஞ்சை மன்னரும் துரைச்சிங்கமும் வெளியேறியது அக்டோபர் மாதம் 15-ம் நாள் நள்ளிரவு. பகைவர் சூழ்ந்து நின்ற நிலையில் அவர் வெளியேறியதை ஒரு பேரதிசயமாகவே கருதவேண்டும். கானகத்தை வெட்ட வெளியாக்கி உட்சென்ற பகைவர், ஆங்கிருந்த அறுபத்து நான்கு வீரரைக் கைது செய்தனர்; சின்ன மருது சேர்வையும் அவர்களுள் ஒருவர். ஊமைத் துரையும் அந்தக் கூட்டத்தில் இருந்தாரென்று பகைவர் நினைத்தனர். கும்பினி வெள்ளையர் ஒருவரும் அவரை நேரே கண்டதில்லை யாதலின், அவரும் பிடிபட்டார் என்றே எண்ணியிருந்தனர்!

## சின்னமருதுவின் கோர முடிவு

பிடிபட்ட புரட்சி வீரர்களைத் திருப்பத்தூர்ச் சிறையில் ஒரு வாரகாலம் அடைத்துவைத்துப் பின்பு அனைவருக்கும் மரண தண்டனை விதித்தனர் வெள்ளையர். கர்னல் ஆக்னியூவின் ஆணையின் பேரில் ஒரு பொது விடத்தில் சின்னமருது சேர்வை கோரமாகத் தூக்கி லிடப்பட்டார்!

## பெரிய மருதுக்கும் தூக்குமேடை!

பின்பு, பெரிய மருது சேர்வையும் கும்பினியாரின் கொடுமைக்கு ஆளானார். அவரை வெள்ளையர் நாடெங்கும் துரத்திப் பிடிக்க முயன்றனர். அவர் அகப்படாமலிருந்தமையால், அவரது தொடையைத் துப்பாக்கியால் சுட்டனர்! அதையும் பொருட்படுத்தாமல் அவர்

நடந்து சென்று, சிவகங்கையை அடைந்து, கர்னல் ஆக்னியூவின் முன்னிலையில் கும்பினியாரை வன்மையாகக் கண்டித்து நின்றார்! அவருக்கும் தூக்குத் தண்டனை அளித்தான் அத்துரைமகன்!

## கும்பினித்தலைவரின் கலக்கம்

மருதுவை விட்டு நீங்கிய ஊமைத்துரை, தம் தம்பியுடன் **திருமயம்** என்னுமூரையடைந்து, மறைந்து நின்று மீண்டும் படைதிரட்டினார். இதனிடையே பகைவருக்கு அச்சம் விளைவிக்கக்கூடிய செயலொன்றைச் செய்து முடித்தார். சில செவ்விளநீர்களைக் கொணர்ந்து, வெள்ளையர் சிலரின் சிரங்களைத் துணித்து, காய்களினிடையே அச்சிரங்களைப் பொதித்து வைத்துப் பொதிகளாகக்கட்டி. "சீமைத்துரைக்கு ஊமைத்துரை அனுப்பிய வரிப்பணம்" என்ற ஓலைச்சீட்டுகளை அப்பொதிகளுள் வைத்து, எருதுகளின் மேல் ஏற்றி அனுப்பினார்! திருச்சியில் கும்பினித்தலைவர் மாளிகையில் அவை இறக்கப்பட்டன! அவற்றைக் கொண்டு வந்தவர் மறைந்தனர். வெள்ளைத்துரை, இளநீர்களைக் கண்டு மகிழ்ந்து எடுத்துப்பார்த்தார்! துடிதுடித்து நின்றார்! இளநீர்களுக்கிடையே வெள்ளையரின் சிரங்களைக் கண்டார்! சீட்டுகளை எடுத்துத் தமிழறிந்த ஒருவர் படிக்கக் கேட்டார்; உடனே உளங்கொதித்து எழுந்தார். 'பிடிபட்டான் எனக்கருதப்பட்ட ஊமைத்துரை மீண்டும் தோன்றியுள்ளானே' என்று வியப்புற்று, நாடெங்கும் ஒற்றர்களை அனுப்பி, அவர் இருக்குமிடத்தை அறிந்து வருமாறு பணித்தார்; அவர் திருமயத்திலிருப்பதாகத் தெரியவந்தது.

## ஊமைத்துரையின் இறுதிப்போர்

கும்பினிப் படைகள் ஒருங்கே திரண்டு திருமயம் கோட்டையை முற்றுகையிட்டன. அப்பொழுது நள்ளிரவு; அண்ணனும் தம்பியும் தனித்து இருந்தனர். பாஞ்சையதிபரின் உடல் நிலையில் ஊறு கண்டிருந்தது; உடல் நலிந்திருந்தாலும் உள்ளம் நலியவில்லை. பகைவரைக் கண்டதும் பொங்கி எழுந்தார். சுருள் வாளைக் கையிலெடுத்துத் தம்பியை அருகழைத்து, "தம்பி! என் பின்னால் வா. தாமதிக்காதே" என்று சொல்லிக் கொண்டே, அருமைத் தம்பி பின்தொடர, வடக்கு வாயில் வழியாக வெளியே பாய்ந்தார். எதிர்த்து நின்ற பகைவரைச் சுருள்வாளைச் சுழற்றி வெட்டி வீழ்த்தினர். விரைந்து வெளியே சென்றபொழுது, துரைச்சிங்கம் கால் இடறிக் கீழே விழுந்தார். அவரைப் பகைவர் பிடித்துக் கொண்டனர்.

## துரைச்சிங்கம் தூக்கிலிடப்படுதல்

கும்பினிப்படைத்தலைவர் தம்பியைக் கமுதிக் கோட்டைச் சிறையில் அடைத்து வைத்தார். சின்னாட்கள் கழிந்தபின், சிறைப்பட்டிருந்த துரைச்சிங்கத்தையும் அவர் உறவினரையும் வெள்ளையர் பாஞ்சாலங்குறிச்சிக்குக் கொண்டு சென்றனர். முன்னைய போரில் அமைக்கப்பட்டிருந்த பீரங்கி மேட்டில் தூக்கிலிடப்பட்டார் துரைச்சிங்கம். அந்தக் காட்சியை வெள்ளையர் வெறிகொண்டு பார்த்து நின்றனர்! கலங்கா நெஞ்சத்துடன் தூக்கு மேடையில் ஏறி நின்ற துரைச்சிங்கம், தம் கழுத்தில் தாமே கயிற்றை மாட்டிக்கொண்டு தாய்

நாட்டிற்குத் தமதுயிரைத் தியாகம் செய்தார். அன்று நவம்பர் மாதம் முப்பதாம் நாள்.

## துரைச்சிங்கத்தின் தனிப்பண்பு

துரைச்சிங்கம் இறக்கும்பொழுது அவருக்கு வயது இருபத்தொன்று. இச்சிறுவயதில் அவர் பட்ட அல்லல்கள் அளவில. அவர் வீரம் மிக்கவர்; அஞ்சாநெஞ்சர்; சகோதர வாஞ்சை மிக்கவர். "சிறிதும் தன்னலம் கருதாத சுத்தவீரர்" என வெள்ளையரும் அவரைப் போற்றியுள்ளனர். தன்னலமின்றித் தாய் நாட்டுக்காக உழைத்த தம்பியின் புகழ் ஓங்கி வளருமாக!

## ஊமைத்துரை துறவறம் பூணுதல்

திருமயத்திலிருந்து தப்பிச் சென்ற ஊமைத்துரை, திண்டுக்கல் மலைக்குகைகளில் மறைந்து வாழ்ந்தார். தம்பிக்கு யாது நேர்ந்ததோ எனக்கவலை கொண்டார். அந்நாளில் ஓர் உறவினர் அவரைக் கண்டு துரைச்சிங்கம் தூக்கிலிடப்பட்ட செய்தியை அறிவித்தார். கலங்காத அவர் உள்ளம் கலங்கி நின்றது! துயரைத் தாங்க முடியாது துடிதுடித்துப் புலம்பினார். பின்பு மனம் தேர்ந்து, உயிரையும் உலகையும் வெறுத்து, காசிமாநகரையடைந்து, அங்கே சின்னாட்கள் தங்கி உலகநாதனை வழிபட்டுப்பின் இமயம் சார்ந்து துறவியானார். அப்பொழுது அவருக்கு வயது முப்பது.

## சரித்திர வாயிலாக அறிவது

ஊமைத்துரை, தமது முப்பதாம் வயதில் துறவு பூண்டு இமயம் சார்ந்தார் என்பதே நாட்டு வரலாறு. சரித்திரச் சான்றுகள் வேறு விதமாக உள்ளன. கும்பினியார் ஊமைத்துரை, துரைச்சிங்கம் ஆகிய இருவரையும்

பிடித்துச் சின்னாட்கள் சிறையில் வைத்திருந்து, பின்பு பாஞ்சாலங்குறிச்சிப் பீரங்கி மேட்டில் தூக்கிலிட்டனர் என்று சரித்திரம் கூறுகிறது. முடிவு யாதாயினும் அவரது வாழ்க்கைச் சரிதம் வியப்புக்குரியது. பிறந்த பொன்னாட்டின் உரிமையை நிலைநாட்ட முனைந்து நின்று, அரச வாழ்வைத் துறந்து, அரும்பணியாற்றிய அவ்வீரருக்கு நேர்ந்த முடிவு விதியின் கொடுமை என்றே கூறுதல் தகும்.

## கும்பினியாரின் வஞ்சம்

ஊமைத்துரையின் ஆருயிர்த்துணைவி அதுபோழ்து கருத்தரித்திருந்தாள். மூன்று சிறுவருடன் அயலே சென்றவள், **செக்காரக்குடி** என்னும் கிராமத்தை யடைந்து, கும்பினியார் அறியாதவாறு மறைந்து வாழ்ந்து வந்தாள். பாஞ்சையரண்மனையில் ஊழியம் செய்து வந்த பலர் அங்கிருந்தனர். அவர்கள் அந்த அம்மையைக் கண்ணேபோல் பாதுகாத்து வந்தனர். ஒரு நாள் அரண்மனைப் பசு ஒன்றைக் காப்பாற்றி வந்த ஒரு மாது, அது ஒரு கன்றை ஈன்றவுடன், அதனை அதற்குரியவரிடம் சேர்ப்பிக்கக் கருதி, செக்காரக்குடியை அடைந்து ஊமைத்துரையின் மனைவியிடம் ஒப்படைத்தாள். அந்த அம்மை, தான் அரண்மனையைச் சார்ந்தவள் அல்லள் என மறுத்தும், அம்மாது மேலும் வற்புறுத்தினள். அந்த அம்மை சினந்து அம்மாதை அடித்து விரட்டினாள். அவளது கூக்குரலைக் கேட்ட சில கும்பினி ஊழியர்கள், உளவறிந்து அந்த அம்மையைச் சிறைப்படுத்தினார்கள்! கும்பினியாரின் வஞ்சம் பெண்களையும் விடவில்லை!

## 14. வீர வழிபாடு

### கோழைகளின் கூற்று

சரித்திர வாயிலாகத் தமிழ் நாட்டுக்கு ஒரு இழுக்கு உண்டு என்று பலர் கூறுகின்றனர். வெள்ளையரை வர வேற்று அவரடி பணிந்து பரிந்து நின்றவர் தமிழரே என்பர். இது ஓரளவு உண்மையே யாயினும், தமிழரிலும் உரிமை வேட்கை மிகுந்த பலர் இருந்தனர் என்பதற்குப் பாஞ்சாலங்குறிச்சிப் போர் ஒரு பெருமை மிக்க சான்றாகும். கோழைகள் எந்நாட்டிலும் உளர்; அவரே அந்நாட்டின் பிரதிநிதி எனக் கூறுதல் தகாது. கோழைகளால்தான் சுத்தவீரன் புகழ் அடையக்கூடும். பகைவரிடமும் பரிவுகாட்டிய **ஏசுநாதரைக்** காட்டிக் கொடுத்தவன் அவரது சீடனேயல்லவா? அடிமைகளை அமெரிக்காவிலிருந்து அறவே களைத்த **ஆபிரகாம் லிங்கன்** தன் இனத்தான் ஒருவனால் சுடப்பட்டு மாண் டாரன்றோ? நம் நாட்டிலும் **அண்ணல் காந்தியடிகளைச்** சுட்டுக் கொன்றவன் இந்தியரில் ஒருவனன்றோ? இதே போல், உரிமை வேட்கை மிகுந்து நின்ற இரு வீரமணி கள் உயிர்நீங்க எட்டப்பர் காரணமாக இருந்தார். இதில் வியப்பு ஒன்றுமில்லை. இவ்விரு தமிழ் மன்னரும் உரிய காலத்துக்கு முன்னமே தோன்றிய உத்தம வீரர். ஊமைத்துரை மறைந்து இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னரே காந்தியடிகள் தோன்றினார். 1920-ம் ஆண் டில் அவர் துவக்கிய உரிமைப்போர், இருபத்தேழு ஆண்டுகள் கழித்து இறுதி நிலையை அடைந்தது.

## நன்றி மறந்தவன் தமிழனல்லன்

இழந்த உரிமையை இன்று நாம் மீண்டும் பெற்றுள்ளோம்; அண்ணலின் அறப்போரின் பயனாக வெற்றி கண்டோம். இதற்கிடையில் பல இன்னல்களை அடைந்தோம். தூத்துக்குடித் தமிழர் **சிதம்பரனாரை** அறியாத தமிழன் யார்? திருப்பூரில் தடியடியால் மாண்ட **குமரன்** தமிழனல்லவா? இன்னும் பேர் தெரியாத பலர் முயன்று அடைந்த செல்வம் **நாட்டு விடுதலை.** இதற்குத் தமிழ் நாட்டில் அடிகோலியவர் இருவர்; அவர்களே **கட்ட பொம்மனும், ஊமைத்துரையும்** ஆவர். அவர்களது நினைவை நாம் பொன்னே போல் போற்றவேண்டும். நன்றி மறந்தவன் தமிழனல்லன்.

> " எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு "

என்றார் திருவள்ளுவர். அதனை நினைத்து உரிமைப் போரில் உயிர் நீத்த உத்தமவீரர்களை நாம் மறவாதிருத்தல் வேண்டும். இதுவே பாரதநாட்டுப் புதல்வரின் கடமையாகும்.

## வீர வழிபாடு

தமிழன்னையின் விடுதலைக்குத் தன்னலம் கருதாது போர்புரிந்த ஊமைத்துரைக்கு நாம் தலை வணங்குவோமாக! அத் தமிழ் வீரரை என்றும் மறவாதிருப்போமாக!

**ஊமைத்துரை புகழ் ஓங்குக!**

> ' பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும்
> நற்றவ வானினும் நனி சிறந் தனவே. '

## மாதிரி வினாக்கள்

1. பொம்மு மரபினர் பாண்டிய நாட்டில் அரசுரிமை பெற்ற வரலாற்றை விளக்குக.

2. வீரபாண்டியக் கட்டபொம்மனாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதுக.

3. ஊமைத்துரை சிறையினின்றும் விடுபட்டது எவ்வாறு ?

4. சிறையினின்று வெளிவந்த ஊமைத்துரை வெள்ளைக் குழுவினரை வேரறுக்க என்ன திட்டமிட்டார் ?

5. ஊமைத்துரை இளகிய மனத்தினர் என்பதற்குரிய சான்றுகளை எழுதுக.

6. பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைப் பகைவர் எவ்வாறு கைப்பற்றினார்கள் ?

7. குற்றுயிராகப் படுகளத்தில் கிடந்த ஊமைத்துரை எவ்வாறு, யாரால், எப்படிக் காப்பாற்றப்பட்டார்?

8. பாஞ்சைவீரர் ஆற்றலும் வீரமும் மிக்கவர் என்பதற்குச் சான்றுகள் கூறுக.

9. எட்டப்ப நாயக்கர் எவ்வகைகளில் ஊமைத்துரைக்குத் தீங்கிழைத்தார் ?

10. எட்டப்ப நாயக்கரின் குணவிசேடங்களைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

11. ஊமைத்துரையின் பண்புகளைப்பற்றி ஓர் கட்டுரை வரைக.

12. ஊமைத்துரையின் வாழ்க்கை உனக்கு எவ்வகையில் வழிகாட்டியாக அமைந்துள்ளது என்பதை விளக்குக.

# OOMAITHUR

OR

## Thannalam Karuthatha qagi

Vidwan N. SHANMUGAM
T. T. V. High School, Madras

VIDYODAYA PUBLICATIO
9, MOUNT ROAD
MADRAS-2.

Copyright ] [ Price As. 12/-